
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

08.04.2009 - மலர் 06, இதழ் 05



## உயிர்ப்பின் பெருவிழா

Rs.25.00




## ஆசியா-ஐரோப்பா அமைப்பின் ஆரம்பமும் தொழிற்பாடும்

க.பொ.த ( உ/தர) மாணவர்களுக்கு...



## பழுதடைந்த உணவுகளை இனங்காணும் வழிமுறைகள்



## விலைக்கு விற்கப்பட்ட சென்னை மாநகரம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விக்டோரியா நீர்த்தேக்கத்தின் ஆரம்பம்

இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களில் 'விக்டோரியா' நீர்த்தேக்கம் மிகவும் விசாலமான நீர்த்தேக்கமாகும். இந்த நீர்த்தேக்கத்தின் பயனாக ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பைக் கொண்ட வயல்நிலங்களில் பயனைப் பெறுவதுடன் தேவையான மின்வலு சக்தியை பெறக்கூடியதுமாக இருக்கின்றது. பிரிட்டன் நாட்டின் நிதி உதவியின் கீழ் இத்திட்டத்தின் ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மேற்படி, நீர்த்தேக்கத் திட்டமானது 14 பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக தெல்தெனிய பிரதேசத்தின் நகரமானது முற்றுமுழுதாக நீரில் மூழ்கடிக்கப்பட்டதுடன் அதற்கு மாற்றாக புதியதோர் நகரமும் அமைக்கப்பட்டு பிரதான போக்குவரத்து வீதிகளும் அமைக்கப்பட்டன. இத்தனை சிறப்புமிக்க 'விக்டோரியா' நீர்த்தேக்கம் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி பிரிட்டனின் அப்போதைய பிரதமராக இருந்த மார்க்கிரட் தட்சரினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அதன்படி, இந்த ஏப்ரல் 12 ஆம் திகதியன்று விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு 29 வருடங்கள் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தீக்குச்சிகளினால் உருவான மாயமாளிகை




'ஹெரி பொட்டர்'கதையை நம்மில் யாருமே மறந்திருக்க மாட்டோம். ஜே.கே.ரோலிங்கிஸினால் எழுதப்பட்ட 'ஹெரி பொட்டர்' கதையினை திரைப்படமாகத் தயாரித்த பின்னர், அந்தக் கதை நடைபெறும் மாயமாளிகையொன்று காட்டப்படுகின்றதல்லவா? 'ஹொக்வோட்ஸ்' எனப்படும் அந்த மாய மாளிகையை நினைவுறுத்தும் விதமாக முற்று முழுதாக தீக்குச்சிகளை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்ட அந்த மாய மாளிகையின் தோற்றம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதையே படத்தில் காண்கிறீர்கள். இதை வடிவமைத்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த பெட்ரிக் எக்டோன் என்பவராவார். இவர் அடுத்தபடியாக ரோலிங்கிஸின் அடுத்த கதையான 'லோட் ஒஃப் த ரிங்க்' திரைப்படத்தின் 'மினஸ் திலிஸ்' மாளிகையை இவ்வாறு வடிவமைக்கின்றார். இப்படைப்பு இந்த வருடம் நிறைவு பெறுமாம்.

# மானிட விடுதலைக்காக அவதரித்து மரித்து, உயிர்த்தெழுந்த இயேசு

உலகிலுள்ள கிறிஸ்தவ மக்கள் பரிசுத்த வாரத்தை அனுஷ்டித்து வருகின்ற இந்த வாரத்தைத் தொடர்ந்து ஏப்ரல் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று 'ஈஸ்டர்' எனப்படும் உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை பெருவிழாவை கொண்டாடவுள்ளனர்.

மானிட மீட்பராக இப்பூவுலகில் பிறப்பெடுத்த இயேசு கிறிஸ்து அதே மானிடர்க்காகவே மரித்தார். அவ்வாறு மனிதனின் மீட்பிற்காக பிறப்பெடுத்த இயேசு கிறிஸ்து அதே மனிதனால் நோகடிக்கப்பட்ட சம்பவத்தை நினைவுகூருவதாகவும் இந்த வாரத்தை கருதமுடியும்.

இயேசு கிறிஸ்து அந்தப் பாடுகளைப் பட்ட வாரத்தை மூன்று கட்டங்களாகக் குறிப்பிடலாம். பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பனவே அந்த மூன்று கட்டங்களுமாகும். இந்த மூன்று விடயங்களையும் உள்ளடக்கிய வாரத்தின் முதல் ஞாயிறு நாளே 'குருத்தோலை ஞாயிறாக' கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பெரிய வியாழன், பெரிய வெள்ளி என்று பரிசுத்த வாரங்கள் அமைகின்றன.





### குருத்தோலை ஞாயிறு

இயேசு கிறிஸ்து ஜெருஸலேம் நகருக்குள் மக்களின் ஆரவாரத்துடன் பவனி வந்த நாளே 'குருத்தோலை ஞாயிறு' நாளாகக் கருதப்படுகின்றது. அதன் நினைவாகவே இந்த நாளில் கிறிஸ்தவர்கள் ஆலயங்களிலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலையை வீடுகளுக்கு கொண்டு சென்று அந்த நாளினை நினைவு கூருகின்றனர்.

### பெரிய வியாழன்

இயேசு கிறிஸ்து சிலுவைப்பாடுகளை அனுபவிப்பதற்கு முன் தன் சீடர்களுடன் இறுதி இராப்போசன உணவை அருந்திய நாளே பெரிய வியாழனாகும். அந்த இரவில் தன்னை ஒருவன் காட்டிக் கொடுக்கவுள்ளதை அறிந்தும் அதனைப் பொருட்படுத்தாமல், தம் சீடர்களுடன் இராப்போசன விருந்தை உண்டார் இயேசு. அவ்வேளையில், அப்பத்தைப்பிட்டு, தன் நினைவாக சரீரமாக அப்பத்தையும், இரத்தமாக பானத்தையும் அருந்துமாறு கூறினார். இதுவே கத்தோலிக்க திருச்சபையால் தேவநற்கருணை, குருத்துவம் ஆகிய இரண்டு திருவருட் சாதனங்களாக ஏற்படுத்தப்பட்டன. உண்மையான மனிதத்துவத்துடன் வாழ்ந்து காட்டிய இயேசு கிறிஸ்து அன்பு செய்யவும், ஒருவரையொருவர் மன்னித்து வாழவும் கற்றுக்கொடுத்தார்.

### பெரிய வெள்ளி

இயேசு கிறிஸ்து கூறியது போலவே தனது சீடர்களில் ஒருவனால் அவர் காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். இவ்வாறு இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, மரித்த நாளே 'பெரிய வெள்ளி' நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது.



பாரிய சிலுவையை சுமக்கச் செய்து,முள்கிரீடம் தாங்கச் செய்து, சவுக்கடிகள் கொடுக்கப்பட்டு 'கல்வாரி மலை' வரை இயேசு கிறிஸ்து வதைக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவையாவற்றையும் அவர் பொறுத்துக் கொண்டு தன்னைப் பலியாகக் கொடுத்து உலகை மீட்கத் திருவுளம் கொண்டார் . இறுதியில் சிலுவையில் அறையப்பட்ட பின்னரும் பலரும் அவரை எள்ளி நகையாடினர். ஆனால், தன்னைத் துன்புறுத்துவோரை மன்னிக்குமாறும் அவர்கள் தாம் செய்வது இன்னதெனத் தெரியாமல் செய்வதாகவும் தனது தந்தையிடம் வேண்டிக் கொண்டார். இறுதியில் இறைவன் சித்தப்படியே சிலுவையில் தனது உயிரை நீத்தார் அவர்.

### உயிர்த்த ஞாயிறு

இயேசு மரணித்து மூன்றாம் நாளாகிய ஞாயிறு தினத்தன்று அவர் உயிர்த்தெழுந்த அதிசயம் நிகழ்ந்தது. அன்று அதிகாலை பெண்கள் சிலர் இயேசு வைக்கப்பட்டிருந்த கல்லறைக்குள் சென்று பார்த்தபோது அவர் அணியும் உடைகள் காணப்பட்ட போதிலும் அவரது உடலைக் காணவில்லை. இயேசு உயிர்த்தெழுந்தமை அறியப்பட்டது. இயேசுவின் உயிர்ப்பு அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த அந்த உன்னத நாளே 'உயிர்த்த ஞாயிறாக' (Easter Sunday) உலகவாழ் கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### பரிசுத்த வாரமும் உயிர்த்த ஞாயிறும்

**இயேசுவின் பாடுகளை உணர்த்தும் இந்த பரிசுத்த வாரத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் உலகவாழ் மக்களுக்கு பல செய்திகளையும் எடுத்துக்காட்டுகின்றது. உலகை மீட்பதற்காக பிறந்து அதற்காகவே மரித்தார் இயேசு. ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துங்கள். அன்பு ஒன்றே உலகை நல்வழிப்படுத்தக்கூடிய சக்தியாகும். அதனையே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமுமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் -5 மாணவர்களுக்கான மதிப்பீட்டுப் பரீட்சை



கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய கல்வி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு நிலையம், பாடசாலைகளில் கடந்த வருடம் தரம்-4 இல் கல்வி கற்ற மாணவர்கள் பாடங்களில் பெற்றுக் கொண்ட அடைவு மட்டத்தை மதிப்பிடு வதற்கு தேசிய ரீதியிலான செயற்றிட்ட மொன்றை மேற்கொள்ளத் தீர்மானித் துள்ளது.

இதனூடாகப் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் மாணவர்களுக்குத் தேவையான கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, தற்போது தரம்-5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான விசேட மதிப்பீட்டுப் பரீட்சையொன்றை எதிர்வரும் மே மாதம் 20, 21 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளது. வலயக் கல்வி அலுவலகங்கள் மூலமாக மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய கல்வி மற்றும் மதிப்பீட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவில் சிறப்பு பல்கலைக்கழகம்

சார்க் வலயத்தைச் சேர்ந்த நாடுகளிலுள்ள மாணவர்களுக்காகப் புதிய பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கு இந்தியா தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சார்க் வலய நாடுகளுக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடல்களின் பிரதிபலனாகவே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்கல்வியைத் தொடர்வதற்கு வசதிகளின்றி உள்ள மாணவர்களின் தேவை கருதி நிறுவப்படவுள்ள இந்த பல்கலைக்கழகத்தை புதுடில்லியில் அமைப்பதற்குரிய முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# புற்றுநோய் பாதுகாப்பு



**2010** ஆம் ஆண்டில் எய்ட்ஸ்,மலேரியா, எலும்புருக்கி நோய்களால் இறப்பவர்களை விட, புற்று நோயால் பாதிக்கப்பட்டு, இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று 'உலக சுகாதார நிறுவனம்' தன் சமீபத்திய அறிக்கை யொன்றில் தெரிவித் துள்ளது. இந்த வருடம் மட்டும் சுமார் 1 கோடியே 20 லட்சம் பேரளவில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, அவர்களில் 76 லட்சம் பேர் இறக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் அபிவிருத்தி அடையும் நாடுகள், பின்தங்கிய ஏழை நாடுகளில் வாழ்பவர்களே புற்றுநோயால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எய்ட்ஸ் நோயை அடுத்து மனிதனை மெல்ல,மெல்ல கொல் லக்கூடியதுதான் புற்றுநோய். அளவுக்கு அதிகமாக புகையிலை, சிகரெட் பயன்படுத் துவதனாலும் பரம்பரையாகவும் புற்றுநோய் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுவதோடு, சில உணவு முறைகளும் இதற்குக் காரணமாக இருக்கின்றன.





பொதுவாக, எண்ணெயில் பொரித்தெடுத்த உணவு வகைகள் உடலுக்கு கேடு தரக் கூடியவை. ஆனால், 'சிப்ஸ்' அதில் விதிவிலக்காக உள்ளது. அதை சாப்பிடுவ தால் புற்றுநோய் தடுக்கப்படு வதாக லண்டன் ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிறார்கள்.

சிப்ஸிலுள்ள விற்றமின் 'C', புற்றுநோயை தடுப்பதில் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்றும் ஓர் அப்பிள் பழ்ம், திராட்சைப் பழத்தில் உள்ள விற்றமின் 'C' சத்தை விட, 175 கிராம் சிப்ஸில் 3 மடங்கு விற்றமின் 'C' உள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். விற்றமின் $B_1$, $B_6$, நார்ச்சத்து மற்றும் இரும்புச்சத்து ஆகியவையும் சிப்ஸில் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், சிப்ஸில் விற்றமின் 'C' இருக்கின்றது என்பதற்காக அதனை அதிகம் சாப்பிடுவதை விடுத்து, விற்றமின் நிறைந்த பழங்களை அதிகமாக உட்கொள்வதே நல்லது என்றும் ஆய்வை மேற்கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாடநூல்களின் மீள்பாவனை 23 சதவீதத்தால் அதிகரிப்பு

இலவசப் பாடநூல்களின் மீள்பாவனை இவ்வருடம் 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் இதனால், மொத்த செலவீட்டில் 80 கோடி ரூபாவினை மீதப்படுத்த முடிந்துள்ளதாகவும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



கடந்த வருடம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இலவசப் பாட நூல்களை நேர்த்தியாகவும் கவனமாகவும் பாவிக்கும் மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றி தழ்களை வழங்கும் திட்டத்தின் பிரதிபல னாகவே இந்நிலை சாத்திய மானதாக அவர் தெரிவித் துள்ளார். 2009 ஆம் ஆண்டில் மேற்படி மீள் பாவனையை 35 சதவீதமாக்க எண்ணியுள்ளதாகவும் இந்த இலக்கை அடைவதற்கு ஆசிரியர் களினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

60 DAY'S SPOKEN ENGLISH Course
இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
ENGLISH LANGUAGE யில் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
DIPLOMA IN ENGLISH தமிழில் ஓர் அளவு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆங்கிலம் தெரிந்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடநெறியாகும்.
60 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்

FREE FREE T.SHART
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHART ஒன்று வழங்கப்படும்

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், இல்லத்தரிசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் உதவும் அவசர சிகிச்சைப் பிரிவு

**'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ஆன்றோர் வாக்கு. நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்து ஆரோக்கியமாக வாழ நாம் பெரும் பிரயத்தனம் மேற்கொள்கின்றோம். எனினும், எமது சக்திகளையும் மீறி நோய் நொடிகளுக்கும் எதிர்பாராத விபத்துக்களுக்கும் முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் நோயாளி அல்லது விபத்தில் சிக்கியவரைக் காப்பாற்ற நாம் உடனடியாக வைத்திய சாலைக்கு விரைகின்றோம். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப் படுகின்றது. வைத்தியசாலையிலுள்ள இத்தகைய அவசர சிகிச்சைப் பிரிவு பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.**

## கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவு

1991 மார்ச் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அது பின்லாந்து அரசின் உதவியுடன் சுகாதார அமைச்சினால் கட்டப்பட்டது. இதற்கு 660 மில்லியன் ரூபா செலவிடப் பட்டது. இதுவே இலங்கையின் முக்கியமான அவசர சிகிச்சை சேவையாகும். இச்சேவையில் கீழ் வரும் பிரிவுகளும் அடங்கியுள்ளன.

## நோயாளர்களை வகைப்படுத்தும் மற்றும் தகவல் மத்திய நிலையம்

எந்தவொரு அவசர சந்தர்ப்பத்திலும் அல்லது நெருக்கடி நிலையிலும் அங்கவீனரான நோயாளிகள், ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகள், ஆபத்தான நிலையில் இல்லாத நோயாளிகளை இனங்கண்டு காப்பாற்றுதல் இந்தப் பிரிவிற்குரிய கடமையாகும். அத்துடன், தகவல் மற்றும் சத்திர சிகிச்சையின் அவசியம் குறித்தும் தேவையான தகவல்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதும் இந்தப் பிரிவின் செயற்பாடாகும்.

**வெளி நோயாளர் பிரிவு:**

வகைப்படுத்திய நோயாளர்களுக்கு அடிப்படை ஆரம்ப சிகிச்சை வழங்கும் பிரிவு.

**கண்காணிப்புப் பகுதி:**

சிகிச்சை அளித்த பின் தொடர்ந்து கண்காணிப்பிற்கு உட்படுத்த வேண்டிய நோயாளிகளை அனுமதிக்கும் பகுதி.

**தீவிர சிகிச்சைப் பிரிவு:**

தீவிர அவதானிப்புடன் சகல வேளைகளிலும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்க வேண்டிய நோயாளிகளை அனுமதிப்பது இப்பிரிவிலாகும்.

**சத்திர சிகிச்சைப் பிரிவு-02:**

சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகள் அனுமதிக்கப் படுவது இப்பிரிவில் ஆகும்.

**பயிற்சி மற்றும் சுகாதார மீளபிவிருத்திப் பிரிவு:**

சுகாதார வைத்தியசாலை செயலணிப் பிரிவு, பிரஜைகள், மாணவர்களுக்கு அறிவூட்டல் வழங்கல், சுகாதார மீளபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்ளும் பிரிவு.

**எக்ஸ்-ரே பிரிவு:**

நோயாளர்களுக்குத் தேவையான எக்ஸ்-ரே புகைப்படம் எடுப்பது இப்பிரிவிலாகும்.

**வைத்தியசாலை காவல்துறை (பொலிஸ்):**

வைத்தியசாலையினுள் சகல சட்ட திட்டங்களுக்கும் அதன் செயற்பாடுகளுக்குமான பொறுப்பினை ஏற்று நடைமுறைப்படுத்துவது வைத்தியசாலை பொலிஸ் பிரிவாகும்.

**நிர்வாகப் பிரிவு:**

மின்சாரம்,வாயு தொடர்பு நடவடிக்கை மற்றும் வைத்தியசாலையின் இதர இலத்திரனியல் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தி செயற்படுத்துவது நிர்வாகப் பிரிவாகும்.இத்தகைய வசதிகள் ஏனைய வைத்தியசாலைகளின் அவசர நோயாளர் சிகிச்சைப்பிரிவுகளில் இல்லை. எனினும், அங்கும் இதற்குச் சமமான உயர்ந்த சேவைகள் வழங்கப் படுகின்றன.

## சிகிச்சை

இப்பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக எதிர்பாராத விபத்துக்கள் அல்லது வேறு நிகழ்வுகளால் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள், அங்கவீனமடைந்தவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். அத்துடன், 12 வயதிற்கு குறைந்த நோயாளர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. பன்னிரண்டு வயதிலும் குறைந்த சிறுவர்கள் கொழும்பு சிறுவர் வைத்திய சாலையிலேயே அனுமதிக்கப்படுவர்.

## அவசர நிலைமையின்போது

இப்பிரிவில் மிகவும் வினைத்திறன் மிக்க சிகிச்சை வழங்கப்படுகின்றது. மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் செயல்படுவதற்காக விசேட நெருக்கடி (இடர்) திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. விபத்துக்குள்ளான நோயாளிகளுக்கு தகுந்த சிகிச்சை கிடைப்பதோடு வேறு சேவைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவிற்குள் நுழையும் இடத்தில் அமைந்துள்ள நோயாளிகளை வகைப் படுத்தும் மற்றும் தகவல் மத்திய நிலையமானது இலங்கையின் வைத்திய கட்டமைப்பிற்கு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதனால்,எந்த அவசர சந்தர்ப்பங்களிலும் நோயாளிக்கு மிக விரைவான சிகிச்சையைப் பெறமுடியும். பயிற்சி அளிக்கும் அலகு முதன்முதலாக ஒரு வைத்தியசாலையில் அமைக்கப்பட்டமை இங்குதான் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் விபத்துக்களைக் குறைக்கவும் கட்டுப் படுத்தவும் உரிய பணிகள் மேற்கொள் ளப்படுகின்றன.

விபத்தொன்று ஏற்பட்டால் அது தொடர்பான செய்தியை பெறும் ஒருவருக்கு அவ்விபத்து அல்லது பாதிப்புத் தொடர்பான சம்பவம் குறித்து முழு விபரத்தையும் கொடுப்பதானது முழுமையான சேவையை பாதிக்கப்பட்டோர் பெறுவதற்கு வசதியாக இருக்கும். அத்துடன், அச்செய்தியை பெற்றுக் கொடுக்கும் நபரின் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன், அந்தத் தகவலை பெற்றுக் கொள்ளும் நபரால் குறிப்பிட்ட விபத்து தகவல் சரியானதா? என முதலில் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். அது சரியான தகவல்தான் என உறுதிப்படுத்திய பின் அதனை வைத்தியசாலையின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் தொலைபேசி கட்டுப்பாட்டுப் பிரிவினர் ஆகியோருக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின் செயல்படுவதோ நோயாளிகளை வகைப்படுத்தும் பிரிவு. அவர்கள் தேவையானவற்றை ஆயத்தப்படுத்தி, வரும் நோயாளிகளுக்கு இலக்கமொன்றை வழங்கி அடையாளப்படுத்தி வைத்தியசாலையில் அனுமதிப்பர். அச்சந்தர்ப்பத்தில் நோயாளி வகைப் படுத்தப்படுவார். பாரியளவு நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வெளி நோயாளர் பிரிவு ஆபத்து மிகுந்த கண்காணிப்பிற்குரிய நோயாளர் களுக்கே சிகிச்சையை வழங்கும்.

கண்காணிப்புக் குறைவான நோயாளர்களை நெருக்கடி வேளைகளில் தயார்படுத்தி வைத்திருக்கும் பகுதியில் அனுமதிப்பர்.அதன்பின் சத்திரசிகிச்சைக்கான நோயாளர்கள் அதற்குரிய பகுதியிலும் வேறு விசேட தேவைக்குரியவர்கள் அவரவருக்குரிய பகுதியிலும் அனுமதிக்கப்படுவர். இந்த வகையில் நோயாளர்கள் வகைப்படுத்துவதன் மூலம் பெருந்தொகையான உயிர்களை காப்பாற்றக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், மிகவும் சிறப்பான சேவையை வழங்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இந்த முறையை ட்ரியாஜ் (Triage) எனும் பெயரில் அழைக்கின் றனர்.

நோயாளர்கள் வகைப்படுத்தப்பட்ட பின் அவரவர்களுக்குரிய சிகிச்சை வழங்கப்படும். அத்துடன், தரவுகள் சேர்ப்பு, மருத்துவ அறிக்கை சமர்ப்பிப்பு, நோயாளர்களின் தேவைகளை தேடிப் பெறல் போன்ற பல விடயங்கள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் செயல்படுவது மிகவும் இலகுவானதாகும். இதற்கு தலைமை தாங்கிச் செயல்படுவது வைத்தியசாலையின் பணிப்பாளரே. ஊடகப் பேச்சாளராகத் திகழ்வதும் வைத்தியசாலையின் பணிப்பாளரே. இச்செயற்பாடுகளுக்கு தேசிய வைத்திய நிலைய முழுச் செயலணியும் எச்சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்கும். நெருக்கடி மிகுந்த சந்தர்ப்பங்களில் குறித்த பிரிவிற்கு தொலைபேசியில் மிகவும் அத்தியாவசியமான நபரே தொடர்புகொள்ள முடியும். இத்தகைய அவசர சந்தர்ப்பங்களில் சுருக்கமான செய்திகள் மூலமே தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதும் முக்கியமானதொரு விடயம்.

**இரஞ்சித் ஜெயகர்**












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி குப்பைகளால் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அச்சுறுத்தல்





டிஸ்கவரி விண்ணோடம் புறப்படுதல்

சர்வதேச விண்வெளி நிலையம் குறித்து நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள அந்த விண்வெளி நிலையத்தில் தற்பொழுது மூன்று விண்வெளி வீரர்கள் தங்கியுள்ளனர். அவர்களில் மைக் ஃபின்கே மற்றும் சென்ட் மெக்னஸ் ஆகிய இருவரும் அமெரிக்கர்கள். மற்றைய விண்வெளி வீரர் ரஷ்ய நாட்டவர். அவரின் பெயர் யூரி லொஞ்சகோவ்.

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி, அம்மூவரும் வழக்கம் போல் தத்தமக்குரிய கடமைகளில் மூழ்கி இருந்தனர். திடீரென விண்வெளி நிலையத்தின் அபாய அறிவிப்பு சமிக்ஞையானது ஒலி எழுப்பியது. இந்த அபாய அறிவிப்பு அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனத்திற்கும் கிடைத்தது. இதனால், அனைவரும் கலவரம் அடைந்தனர். என்ன நடக்கின்றது என்பது குறித்து உடன் ஆராய்ந்ததில் மிகப்பெரிய மேகமொன்று சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கி வருவதை அறிந்துகொண்டனர். என்ன விண்வெளியில் மேகங்களா? இருக்க வாய்ப்பில்லையே. விண்வெளியில் மேகங்கள் இல்லை என்றே நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படி என்றால் இந்த மேகங்கள் எப்படி வந்தன? இது நாம் வானில் சாதாரணமாகப் பார்க்கும் மேகங்கள் அல்ல. ஆக, விண்வெளி நிலையத்தை நோக்கி வந்ததோ 'உடைந்து சிதறிய உடைசல் பொருட்களால் நிறைந்த குப்பை மேகம்' ஆகும்.


விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியே வந்து பணியில் ஈடுபடும் விண்வெளி வீரா


டிஸ்கவரி குழுவினர்

1957 ஆம் ஆண்டில் ஸ்புட்னிக்-1 அனுப்பப்பட்டது. அன்று முதல் இன்று வரை உலகில் எட்டு நாடுகள் வருடத்திற்கு 100 செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்பிய வண்ணமே இருக்கின்றன. ஏற்கனவே அனுப்பிய செய்மதிகள் மற்றும் ரொக்கட்டுகள் உள்ளிட்ட அனைத்து விண்வெளி ஓடங்களினதும் சிதைந்த மற்றும் செயலிழந்த சிதைவுகள், பகுதிகள் இன்றும் விண்வெளியில் மிதந்த வண்ணமே உள்ளன. இத்தகைய பகுதிகளில் 18,000 இற்கும் அதிகமான சிதைவுகளின் பகுதிகள் விண்வெளியில் தங்கி உள்ளன. இதனை 'விண்வெளிக் குப்பைகள்' என அழைப்பர். விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் விண்வெளியில் அகற்றும் கழிவுகள் கூட இந்தக் குப்பைகளில் சேர்கின்றன.

அபாய அறிவிப்பு வந்ததும் விண்வெளி வீரர்கள் மூவரும் உடனே விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டிருந்த 'சோயுஸ்' விண்வெளி கெப்சியூல் பகுதிக்குள் சென்றனர். அவர்கள் 'கெப்சியூலில்' ஏறி விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியேறி விண்வெளிக்கு வந்தனர். மிகத் தொலைவில் இருந்தவாறு என்ன நடக்கின்றது என உன்னிப்பாக அவதானித்த வண்ணமே இருந்தனர். அதிர்ஷ்டவசமாக குப்பை மேகமானது விண்வெளி நிலையத்தை விட்டு விலகிச் சென்றது. அதன்பின்பே குறித்த விண்வெளி வீரர்கள் விண்வெளி நிலையத்திற்குள் மீண்டும் பிரவேசித்தனர்.

இச்சம்பவத்தின் பின் 'நாஸா' நிறுவனம் உட்பட உலகின் சகல விண்வெளி முகவர் நிலையங்களும் இந்த விண்வெளிக் கழிவுகள் குறித்து புதியதொரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### மீண்டும் விண்வெளிக்குச் சென்ற 'டிஸ்கவரி'

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்தில் மற்றுமொரு புனருத்தாரண நடவடிக்கைக்காக 'டிஸ்கவரி' விண்ணோடம், ஃப்ளோரிடாவின் கெனெவரல் முனையில் இருந்து விண்வெளி நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தது. விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள விண்வெளி நிலையத்தின் அளவை மேலும் விஸ்தரிப்பதே இப்பயணத்தின் நோக்கமாகும். இந்த நடவடிக்கையில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் 6 பேரும் ஜப்பானிய விண்வெளி வீரர் ஒருவரும் ஈடுபட்டனர். இதன்போது இவர்கள் நான்காவதும் இறுதியானதுமான சூரிய சக்திக் கருவியினை விண்வெளி நிலையத்தில் பொருத்தியதுடன் மேலும் சில பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டதை அடுத்து, கடந்த 29 ஆம் திகதி 'டிஸ்கவரி' விண்ணோடம் மீண்டும் பூமியை வந்தடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இஞ்சியைக் கொடுத்து மிள

**பல நூற்றாண்டு காலமாக இலங்கை சுதந்திர நாடாக இருந்தது. ஆனால், பின்னர் பல்வேறு வெளிநாட்டவர்கள் இங்கு ஆதிக்கம் செலுத்த முற்பட்டதால் இந்நாடு காலனியாக மாறியது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் இவ்வாறு இலங்கையை அடிமைப்படுத்திக் கொண்டவர்களாவர்.**

**ஒல்லாந்தர் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலமாக இந்து சமுத்திரப் பிரதேசத்திலும் அதனை அண்டிய தீவுகளிலும் தமது ஆதிக்கத்தை செலுத்தினர். இலங்கை உட்பட பல நாடுகளில் இதனால் பல்வேறுபட்ட தாக்கங்கள் ஏற்பட்டன. அந்நாடுகள் பல்வேறு அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்க நேர்ந்தது. இன்று நாம் ஒல்லாந்தர்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.**

## ஒல்லாந்தர் என்பவர்கள் யார்?

இவர்கள் டச்சுக்காரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். வட ஐரோப்பாவில் நெதர்லாந்து எனப்படும் தாழ்நிலத்திலேயே அவர்கள் வாழ்ந்தனர். நெதர்லாந்தின் தலைநகரம் அம்ஸ்டர்டாம் என அழைக்கப்பட்டது. போர்த்துக்கேயர்கள் கடற் பயணங்களில் ஈடுபட்ட காலத்திலேயே ஒல்லாந்தர்களும் கடற்பயணங்களில் ஈடுபட்டனர். கீழைத்தேய நாடுகளில் வர்த்தகப் பணிகளிலும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டு வந்தனர்.

## கீழைத்தேய நாடுகளுக்கு வருதல்

கி.பி 1505 முதல் 1658 வரை கீழைத்தேய நாடுகளில் வாசனைத்திரவிய வர்த்தகத்தின் ஏகபோக உரிமை போர்த்துக்கேயர்களிடமே இருந்தது. அவர்கள் இப்பொருட்களை லிஸ்பன் நகருக்கு எடுத்துச் சென்றனர். ஏனைய ஐரோப்பிய வர்த்தகர்கள் லிஸ்பன் நகரில் இருந்து ஏனைய ஐரோப்பிய நகரங்களுக்கு அப்பொருட்களை எடுத்துச் சென்றனர். ஒல்லாந்தர் அவர்களில் முதலிடத்தை வகித்தனர். காலப்போக்கில் லிஸ்பன் நகருக்கும் ஏனைய ஐரோப்பிய நகரங்களுக்கும் இடையிலான வாசனைத் திரவிய சரக்குப் பொருள் வர்த்தகம் முற்றாக ஒல்லாந்தரிடம் சென்றடைந்தது. அதன் மூலம் அவர்கள் பெருமளவில் பணம் சம்பாதித்தனர். முன்னர் நெதர்லாந்து என்றழைக்கப்பட்ட ஒல்லாந்து உரோம சாம்ராஜ்ஜியத்தின் சரிவின் பின்னர் ஏனைய பல நாடுகளின் காலனியாக மாறியது. அதனை அடுத்து சில சிற்றரசர்களின் ஆட்சிக்கும் உள்ளாகியிருந்தது.

15 ஆம் நூற்றாண்டில் இச்சிறிய நாடு ஸ்பெய்னின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.ரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் புரொட்டஸ்தாந்து சமயத்தவர்களிடையே ஏற்பட்ட விவாதங்கள் மற்றும் யுத்தங்களினால் ஒல்லாந்து பெரிதும் பாதிக்கப்பட்டது. தம் தேசத்தை வெகுவாக நேசித்த ஒல்லாந்தர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தவர்களை அடக்க ஸ்பெய்ன் மேற்கொண்ட நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்தனர். வட நெதர்லாந்தின் ஏழு மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்த போராட்டத்தின் பயனாக 1581 ஆம் ஆண்டு ஒல்லாந்து ஸ்பெய்னின் இரண்டாவது பிலிப் மன்னனின் ஆட்சியில் இருந்து பிரித்து ஒல்லாந்து குடியரசை நிறுவிக் கொண்டது. இதனால், ஒல்லாந்தின் பொருளாதார பலத்தை சிதைக்க வேண்டுமென நினைத்த மன்னன் பிலிப் ஒல்லாந்த வர்த்தகர்கள் லிஸ்பன் நகருக்கு வருவதைத் தடை செய்தான்.

நீண்டகாலமாக ஐரோப்பிய வாசனைத்திரவிய சரக்குப் பொருள் வர்த்தகத்தில் முதலிடத்தைப் பெற்று இருந்த ஒல்லாந்தர் ஸ்பெய்ன் சர்வாதிகாரியின் கட்டளையை ஏற்று இவ்வளவு இலாபம் தரும் வாசனைத்திரவிய வர்த்தகத்தைக் கைவிட்டுவிட விரும்பவில்லை. எனவே, அவர்கள் தாமாகவே நேரடியாகப் இப்பொருட்கள் உற்பத்தியாகும் நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவு செய்தனர்.இதனாலேயே அவர்கள் கீழைத்தேய நாடுகளை அடையும் கடல் மார்க்கம் ஒன்றைக் கண்டுபிடிக்க முற்பட்டனர்.



இக்காலத்தில் போர்த்துக்கல் இரண்டாவது பிலிப் மன்னனின் கீழ் இருந்தமையால் போர்த்துக்கேயரின் காலனிகளை தாக்குவது தமது எதிரியான ஸ்பெய்னைத் தாக்குவதற்குச் சமமாகும் என ஒல்லாந்தர் கருதினர்.

அதேவேளை,புரட்டஸ்தாந்து சமயத்தவர்களான ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க ஸ்பெய்னையும் போர்த்துக்கல்லையும் போர்த்துக்கல் சாம்ராஜ்ஜியத்தையும் தாக்குவதை தமது சமயத்தின் பால் செய்யும் பெரும் சேவையாக கருதினர். எனவே, பிலிப் மன்னனின் அச்சுறுத்தலை மீறும் வகையில் செயற்பட்ட ஒல்லாந்தர் பொருளாதார, சமய மற்றும் அரசியல் காரணங்களுக்காக கீழைத்தேய நாடுகளை நாடி வந்ததாகக் கருதமுடிகின்றது.



## டச்சு கிழக்கு இந்திய வர்த்தக நிறுவனம்

ஒல்லாந்தர்கள் குறுகிய காலத்திற்குள் பாரிய வர்த்தக தேசமாகப் பரிணமித்தனர்.



**ஒல்லாந்தரின் வர்த்தக சாம்ராஜ்ஜியம் கிழக்கு இந்திய டச்சுப் பிரதேசங்கள் (தற்கால இந்தோனேஷியா) இது வாசனைத்திரவிய சரக்குப் பொருட்கள் அதிகமாக கிடைக்கும் பிரதேசமாகும். சீனி, அரிசி மற்றும் அடிமைகள் வர்த்தகத்திற்காக கயானாவை (தற்போதைய சூரினாம்) அடைந்தனர்.**

இலங்

அம்ஸ்டர்டாம் நகரைச் சேர்ந்த செல்வந்த வர்த்தகர்கள் ஒன்று சேர்த்து வர்த்தக நிறுவனமொன்றை அமைத்துக் கொண்டு கிழக்குக்கான கடல் மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முற்பட்டனர். எனினும், அது தோல்வியடைந்தது. 1601 ஆம் ஆண்டு அதேபோன்ற மற்றொரு நிறுவனம் வர்த்தக கப்பல்களை கிழக்குத் திசையில் அனுப்பியது. ஜோர்ஸ் வான் ஸ்பில்வர்ஜன் இக்கப்பல் அணியை வழி நடத்தினர்.

அவர் இலங்கைக்கு வந்து மன்னன் முதலாவது விமலதர்மசூரியனோடு நட்பை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறு வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும்போது பலமுறை போர்த்துக்கேயர்களுடன் மோதல்களில் ஈடுபடவும் நேர்ந்தது. போர்த்துக்கேயர்களிடம் கீழைத்தேய வர்த்தகத்தைப் பறித்துக்கொள்வது கடினமான காரியம் என்பதை ஒல்லாந்தர்கள் புரிந்து கொண்டனர். இதன் காரணமாக அவர்கள் 1602 ஆம் ஆண்டு ஐக்கிய டச்சு கிழக்கு இந்திய வர்த்தக நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

## ஒல்லாந்தர்களின் கீழைத்தேயக் கொள்கை

சாத்வீகமானதும் பக்குவமானதுமான வர்த்தக தேசமொன்றின், வர்த்தக நிறுவனமொன்றின் பிரதிநிதிகளாக இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர்கள் போர்களைத் தவிர்க்க பெருமுயற்சிகளை எடுத்தனர். அவர்கள் தேசிய ஆட்சியாளர்களுக்கு தாழ்மை செலுத்தி வந்தனர். சன்மானங்களை வழங்கினர். போர்களைத் தவிர்த்து, செலவைக் குறைத்து வருமானத்தைப் பெருக்குவதே அவர்களது உத்தியாக இருந்தது. விற்பனைப் பொருட்களை கொள்வனவு செய்வதில் ஒப்பந்தங்கள் தோல்வியடைந்து மாற்று வழிகளே இல்லாத நிலையிலேயே அவர்கள் போரை நாடினர். வர்த்தக நடவடிக்கைகளின் போது அவர்கள் கீழ்காணும் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர்.

✱ கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மட்டுமன்றி கீழைத்தேய நாடுகளுக்கிடையிலும் வர்த்தக உறவை வளர்த்தல்.

✱ சரக்குப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒல்லாந்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...காய் வாங்கியமை'



காலி கோட்டை



இருந்து பணம் கொண்டு வராது. கீழைத்தேய நாடுகளில் மேற்கொண்ட வர்த்தகத்தின் மூலம் பெறும் லாபத்தை பொருட்களின் கொள்வனவுக்காகப் பயன்படுத்தல்.

ஒல்லாந்தர்களுக்கும் இடையே நட்பு முறிவடைந்தது.

### மக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்

தமது வர்த்தக சாம்ராஜ்ஜியத்தின் மூலம் பெருமளவிலான மக்களை அடிமைப்படுத்தி வைத்துக் கொள்ள ஒல்லாந்தர்களால் முடிந்தது. தமது கட்டுப்பாட்டில் இல்லாத நாடுகளில் செல்வங்களை அபகரிப்பதற்காக ஒல்லாந்தர்கள் அந்த நாடுகளி னதும் வர்த்தக ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சித்தனர். இதுவே 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவர்கள் ஆங்கி லேயர்களுடன் போரில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்தது.

''இஞ்சியைக் கொடுத்து மிளகாயைப் பெற்றுக் கொண்டதைப் போல்'' என்று சிங்கள மக்களிடையே ஓர் உவமைக் கதை இருக் கின்றது. இது ஒல்லாந்தர்களின் நடத்தையினால் உருவாக்கப்பட்ட உவமையாகும்.

ஒல்லாந்தர்களுக்கு முன்னர் போர்த்துக் கேயர்களே இலங்கையை ஆக்கிரமித்தனர். போர்த்துக்கேயர்களின் அக்கிரமங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக இரண்டாவது ராஜசிங்கன் ஒல்லாந்தர்களின் உதவியை



காலி கோட்டையில் இருக்கும் ஒல்லாந்த இலச்சினை

தெரிவித்தார். இதுவே ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்த கதையாகும்.

### ஒல்லாந்தரிடம் இருந்து நாம் பெற்றவை

- உரோம, டச்சு சட்டம்
- டச்சு கட்டடக் கலை (காலிக் கோட்டை)
- கோப்பிப் பயிர்ச்செய்கை (வீட்டுத்தோட்டப் பயிராக)
- டச்சு பேர்கர் சமூகம்
- அச்சுத்தொழில்
- பல்வேறு உணவுப் பெயர்கள், ஆட்களின் பெயர்கள் மற்றும் பல்வேறு பழக்கவழக்கங்கள்

**எம்.எஸ்.எம்.ஜுபூப்**

# ...கையில் ஒல்லாந்தர் காலூன்றிய வரலாறு பற்றிய உவமை

### ஒல்லாந்த ஆதிக்கம் இந்து சமுத்திரத்தில் பரவுதல்

கீழைத்தேய வர்த்தக ஆதிக்கத்தை கைப்பற்றிக் கொள்ள போர்த்துக் கேயர் முஸ்லிம்களோடு போரிட நேர்ந்தது. இதேபோல் ஒல்லாந்தர் களுக்கு போர்த்துக்கேயர்களுடன் போரிட நேர்ந்தது. இந்தப் போர்களில் வெற்றி கண்ட ஒல்லாந்தர்கள் கீழைத்தேய வர்த்தகத் துறையின் ஆதிக்கத்தை கைப்பற்றிக் கொண்டனர். இதற்காக பல காரணங்கள் ஏதுவாயிற்று. இக்காலத்தில் போர்த்துக்கேயர்களின் அடாவடித்தனம், கொடுமைகள் மற்றும் அக்கிரமங்களின் காரணமாக கீழைத்தேய நாடுகளில் ஆட்சியாளர்களும் அவர்களை தமது நாடுகளில் இருந்து வெளியேற்றி முயற்சித்துக் கொண்டு இருந்தனர். இதற்காக புதிதாக இப்பிராந்தியத்திற்கு வந்திருந்த ஒல்லாந்தர்களின் உதவியை அவர்கள் நாடினர். இதன் காரணமாக ஒல்லாந்தர்கள் இந்நாடுகளில் காலூன்றிக் கொண்டனர்.

சில ஆண்டுகளில் அவர்கள் அம்போய்னா, மொலுக்காஸ் மற்றும் பண்டா ஆகிய தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டனர். அதனை அடுத்து சுமாத்திரா தீவில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தை முற்றாக ஒழித்து விட்டு ஜகார்த்தா நகர சிதைவுகள் மீது பத்தாவியா என்ற பெயரில் புதிய நகரமொன்றைக் கட்டியெழுப்பினர். அதனையடுத்து அவர்கள் பத்தாவியாவில் இருந்து 'மலக்கா' நீரிணையையும் கிழக்கு இந்திய தீவுகளையும் பரிபாலித்தனர். அத்தோடு, பர்மா, போர்போசா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

### சிங்கள ஒல்லாந்த உறவு முறிதல்


இரண்டாவது ராஜசிங்கனுக்கும் போர்த்துக்கேயர்களுக்கும் இடை யிலான ஒப்பந்தத்தின் ஒரு வாசகம் இரு சாராரிடையே உறவைப் பாதித்தது. போர்த்துக்கேயர்களிடம் பெற்றுக்கொண்ட கோட்டைகளில் மன்னர் விரும்பினால் மட்டும் ஒல்லாந்தர் குடியேறலாம் என மன்ன ரிடம் இருந்த ஒப்பந்தப் பிரதியில் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால், ஒல்லாந்தரிடம் இருந்த பிரதியில் இந்த வாசகம் இருக்கவில்லை. போர்த்துக்கேயர்களிடம் இருந்து கைப்பற்றிக்கொண்ட கோட்டைகளில் படைகளை வைத்துக்கொண்டு அவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஒல்லாந்தருக்கு உரிமை இல்லை என மன்னர் கூறினார். போர்த்துக்கேயர்களுக்கு எதிரான போர்களின்போது ஏற்பட்ட செலவு மற்றொரு சர்ச்சையாகியது. இவற்றின் காரணமாக மன்னருக்கும்

நாடினான். அதன்படி ஒல்லாந்தர்கள் போர்த்துக்கேயர்களை விரட்டியடித்தபோதிலும் இலங்கையர்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. மாறாக இலங்கை ஒல்லாந்தர்களின் காலனியாக மாறியது. போர்த்துக்கேயர்களின் தாக்கத்தைவிட பாரிய தாக்கம் ஒல்லாந்தர்களின் ஆட்சியினால் ஏற்பட்டது. எனவே, இதனை மேற்படி உவமை மூலம் சிங்கள மக்கள் விவரிக்க முற்பட்டனர்.

### இலங்கையை ஆக்கிரமித்தல்

ஒல்லாந்தர்கள் கீழைத்தேய நாடுகளை நாடி வந்தது முதல் கறுவாப் பயிரினால் உலகில் பெயர் பெற்றிருந்த இலங்கை மீது கண்வைத்தனர். ஆயினும், போர்த்துக் கேயர்கள் ஏற்கனவே தமது வர்த்தக ஆதிக்கத்தை இலங்கையில் பரப்பியி ருந்தனர். அவ்வாதிக்கத்தை பறித்துக் கொள்வதற்காக ஒல்லாந்தர்கள் போர்த்துக் கேயர்களுடன் போரிட நேர்ந்தது.

இலங்கையில் மலைநாட்டை ஆண்ட இரண்டாவது ராஜசிங்கனின் வேண்டுகோளுக் கிணங்க ஒல்லாந்தர்கள் கடற்படை யொன்றை கொண்டு வந்தனர். அடம்வெஸ்டர்வோல்ஸின் தலைமை யிலான இக்கடற்படை முதலில் 1638 ஆம் ஆண்டு மட்டக்களப்பை கைப்பற்றிக்கொண்டு இரண்டாவது ராஜசிங்கனுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. இதன்மூலம் இலங்கையில் வர்த்தக உரிமையை ஒல்லாந்தர்களிடம் கையளிப்பதற்கும் போர்த்துக்கேயர்களுடனான போர் களின்போது ஏற்படும் செலவுத் தொகையை வழங்குவதற்கும் இலங்கையின் பிரதான துறை முகங்களை ஒல்லாந்தர் பாவிப்ப தற்கு இடமளிப்பதற்கும் மன்னர் இணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் மலர்வினைக் குறிக்கும்

# உலக சுகாதார தினம்


தலைமையகம்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலச்சினை

**மனிதர்களின் 'ஆரோக்கிய வாழ்வு' குறித்து தமது கவனத்தைச் செலுத்திய ஒரு குழுவினர், ஓர் அமைப்பினை உருவாக்கி, அதனூடாக மனித சுகாதாரத்தையும் ஆரோக்கிய வாழ்வையும் பேணிப் பாதுகாக்க முன் வந்துள்ளனர். அந்த அமைப்புத்தான் உலக சுகாதார ஸ்தாபனம் (World Health Organization-WHO)**







## ஆரம்பம்

1946 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச சுகாதார மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, 28 நாடுகள் ஒன்றிணைந்து, 1948 ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனத்தை ஏற்படுத்தின.

உலக சுகாதார ஸ்தாபனமானது, சுகாதாரம் சம்பந்தமான நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்கி, நவீன விஞ்ஞான ரீதியான மருத்துவ உதவிகளுடன் நோய்களைக் கட்டுப்படுத்தவும் நோய்களை ஒழிக்கவும் பல்வேறு வேலைத்திட்டங்களை செயல்படுத்துகின்றது. அத்துடன், இது ஐக்கிய நாடுகள் சபையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, பொறுப்புடன் செயல்படுவதாகவும் உறுதி பூண்டுள்ளது.

## நோக்கம்

✱ தமது அங்கத்துவ நாடுகளின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்ப ரீதியிலான தகுந்த சுகாதார உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

✱ மக்களின் சுகவாழ்விற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் நோய்களை ஒழித்தல்.

✱ தேவையான வேலைத் திட்டங்களை செயல்படுத்தல், மிகச் சிரமத்துடனும் முயற்சியுடனும் முடிந்தளவு உயர் சுகாதார சேவைகளை வழங்கல்.

## நோக்கங்களை செயல்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள்

✱ வறுமை மற்றும் கவனிப்பாரற்ற மக்கள் குறித்து தமது பார்வையைச் செலுத்துவதோடு, அதிகரிக்கும் மரண விகிதத்தை குறைக்கவும் உடல் பலவீனமான மக்களிடையே கவனம் செலுத்தி அதனைக் குறைத்தல்.

**ஏப்ரல் 7 ஆம் திகதி உலக சுகாதார தினம்**

✱ சுகாதார வளம் நிறைந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவதோடு, சூழல், பொருளாதார, சமூக மற்றும் பல காரணிகளால் ஏற்படும் சுகாதாரப் பாதிப்புகளைக் குறைத்தல்.

✱ மக்களின் நியாயங்களையும் சட்டரீதியான கோரிக்கைகளையும் உணர்வுபூர்வமாக செவிமடுத்து, அவற்றைத் தீர்ப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கல்.

✱ தரமான சுகாதார கொள்கைத் திட்டச் செயற்பாடுகளைக் கட்டி எழுப்புதல்.

## தீர்மானம் எடுத்தல்

ஆரம்பத்தில் இவ் அமைப்பில் 28 நாடுகள் மாத்திரமே அங்கத்துவம் வகித்தன. இன்று 192 நாடுகளின் அங்கத்துவத்துடன் பெரும்பணியாற்றி வருகின்றது. இதனை உலக சுகாதார பாதுகாப்பு அல்லது பராமரிப்பு சபை என்றும் அழைப்பர். சுகாதார நிபுணத்துவம் நிறைந்த முப்பது பேர் கொண்ட நிறைவேற்றுக்குழு ஆண்டுதோறும் இருமுறை கூடி, தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்துவது குறித்து கலந்துரையாடி, செயலில் இறங்கும்.

## செயற்குழு

உலக சுகாதார நிறுவனத்தின் தலைமையகம் சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது. இதன் அங்கத்துவ அலுவலகங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும்.

ஆபிரிக்காவின் கொங்கோ நாட்டின் பிரசாவில்லே (தற்போது தற்காலிகமாக சிம்பாப்வே நாட்டின் ஹராரே நகரிற்கு மாற்றப்பட்டுள்ளது), ஐக்கிய அமெரிக்காவின் வொஷிங்டன், எகிப்தின் கெய்ரோ, டென்மார்க்கின் கொப்பன் ஹேகன், இந்தியாவின் புதுடெல்லி, பிலிப்பைன்ஸ் நாட்டின் மெனிலா ஆகிய நகரங்களில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வலய அலுவலகங்கள் காணப்படுகின்றன. இந்த ஒவ்வொரு வலயத்துக்கும் தனித்தனிப் பணிப்பாளர்கள் இருக்கின்றனர்.

தற்பொழுது, இதன் பணிப்பாளர் நாயகமாக மார்க்ரட் சான் செயல்படுகிறார். சுகாதார நிறுவனத்தின் மொத்த செயலணியினரின் தொகை 3,800 ஆகும்.


பணிப்பாளர் - மார்க்ரட் சான்

## உலக சுகாதார தினம்

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி 'உலக சுகாதார தினம்' ஆக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் சுகாதாரம் சம்பந்தமான அறிவூட்டல், சுகாதாரக் கல்வி வேலைத்திட்டத்தை உலகெங்கும் நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் நடத்தப்படுகின்றன. அத்துடன், இவ் வேலைத்திட்டத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்குபற்றுகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனம் 1948 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதை நினைவு கூருமுகமாக 1950 ஆம் ஆண்டு முதல் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.





**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# மருத்துவ குணம் நிறைந்த மாதுளம்பழம்

**அனைத்துக் காலங்களிலும் கிடைக்கக் கூடிய இனிமையான பழம்தான் மாதுளம் பழமாகும். இதன் விலை சற்று அதிகமா யினும் இதில் சகல சத்துக்களும் நிரம்பி இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இளவயதினருக்கும் மிக உகந்த பழம் என்பதால் இதனைப் பற்றிய பல்வேறு தகவல்களை அறிந்து வைத்திருப்பது அத்தியாவசியமாகும்.**

மாதுளம்பழத்தின் உள்ளே இருக்கும் சிவந்த முத்துக்களின் சுவையே தனித்துவம் மிக்கதுதான்.பெரும்பாலானோர் முத்துக்களை வாயிலிட்டு அதிலிருக்கும் சதையை மட்டுமே உண்டுவிட்டு, விதைகளைத் துப்பி விடுகின்றனர். இது தவறானது. விதையோடு முத்துக்களையும் மென்று விழுங்குவதுதான் உடல் ஆரோக் கியத்திற்கு சிறந்ததாகும்.

## மாதுளைச் சாற்றின் மருத்துவக் குணம்

மாதுளம்பழத்தின் மருத்துவக் குணங்கள் குறித்து இப்போது பரவலாக ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இங்கிலாந்தின் பிரைட்டன் பல்கலைக்கழகம், லெஸ்டர் பல்கலைக்கழகம், நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் என இங்கிலாந்தின் புகழ் பூத்த பல்கலைக்கழகங்கள் இதுபற்றிய ஆய்வில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகம் பல்வேறு பழச்சாறுகளின் மருத்துவ குணங்கள் குறித்து ஆராய்ச்சி செய்தது. அதன் விளைவாக மாதுளம் பழச்சாற்றுக்கு லட்சக் கணக்கான வைரசுகளை ஒழிக்கும் திறன் உள்ளதாக இவர்கள் கண்டறிந்துள்ளனர். இதில் உள்ள ஒரு பொருள் வைரசுகளை மட்டுமே அழிக்கின்றது. வைரஸ்கள் தங்கி யிருக்கும் மனித செல்களில் எந்தப் பாதிப்பையும் இவை ஏற்படுத்துவதில்லை. வைரஸை அழிப்பதற்கென்றே உருவாக் கப்பட்ட மருந்துகளைவிட, எட்டு மடங்கு அதிக செயல்திறன் கொண்டதாக மாதுளை இருக்கிறதாம். மாதுளம் பழச்சாற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ள பொருள், சோதனை முறையில் வெற்றியைத் தந்திருப் பதால் அதை 'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கும் கொடுத்து ஆய்வுகளை செய்ய இருக் கிறார்கள். "நிமோனியா, சளித்தொல்லை, போலியோ, இன்புளுவன்ஸா போன்ற நோய்களுக்கும் இது நல்ல தீர்வாக இருக்கும்" என்கிறார்கள் ஆய்வாளர்கள். "மாதுளம் சாற்றிலிருந்து பிரித்தெடுத்த பொருளைக் கொண்டு மருத்துவ முறைப்படி சொட்டு மருந்து அல்லது கிறீம் தயாரிக்கும் திட்டமும் உண்டு என்கிறது பிரைட்டன் பல்கலைக்கழகம்.

மாதுளைச் சாறானது எய்ட்ஸ் வைரசுகளை அழிக்கும் என்பது நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் அது மகத்தான விஞ்ஞான சாதனையாகவே இருக்கும்.

## மாதுளம் விளைச்சல்

இந்தியா, ஆப்கானிஸ்தான், பலுகிஸ்தான், லாவோஸ் போன்ற நாடுகளில் மாதுளம் பழம் அதிகமாக விளைகின்றது. உலகிலேயே இந்தி யாவின் காஷ்மீர் மாதுளைதான் அதிக இனிப்பா கவும் சுவையாகவும் இருக்கின்றது.

## மாதுளையின் மருத்துவப் பயன்கள்

* **மார்பு வலி நீங்க:** சிலருக்கு தொடர்ந்து மார்பு வலி இருந்துகொண்டே இருக்கும். இது இருதய நோயாக இருக்கக்கூடுமோ என்று சிலர் அச்சப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் செய்ய வேண்டிய வழிமுறை இதுதான். முதலில் மாதுளம் பழத்தின் மேல்பாகத்தில் துவாரம் செய்ய வேண்டும். இத்துவாரத்தின் வழியே பாதாம் எண்ணெய் விட்டு நெருப்பில் வாட்டவேண்டும். பின் அப்படியே உரித்துச் சாப்பிட பலமாத, பலவருட மார்புவலி நீங்கும்.

* **மலச்சிக்கல் தீர:** மாதுளம் பழத்தை நன்கு மென்று உண்ணவேண்டும். இதை மூன்று நாட்கள் உண்டாலே போதும் மலச்சிக்கல் பறந்துவிடும்.



* **பித்தம் குணமாக:** மாதுளம் பழத்தை உரித்து, முத்துக்களை மட்டும் எடுத்து காலையும் மாலையும் 50 கிராம் வரை உண்ண வேண்டும். இவ்வாறு 15 நாட்கள் தொடர்ந்து உண்டு வந்தால் பித்தம் தலைதூக்காது.

* **இருமல் நீங்க:** மாதுளம் பழச்சாற்றுடன் இஞ்சிச்சாறும், தேனும் கலந்து உண்டு வரவேண்டும்.பத்து நாட்களுக்கு காலை, மாலை என வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும்.

* **முடி உதிர்கின்றதா?**

மாதுளையில் 'புளிப்பு' ரக பழங்களை எடுத்து அதன் சாற்றைத் தலையில் தேய்த்துக் குளித்தால் முடி அதிகம் வளரும்.

* **ஞாபக சக்தி மலர:** ஞாபக சக்தி குறைந்தவர்கள் நன்கு பழுத்த மாதுளம்பழத்தை எடுத்து அதன் முத்துக்களை ஒரு சுத்தமான பாத்திரத்தில் போட்டுப் பிசைந்து அதன் சாற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். இதனுடன், தேவையான அளவு சர்க்கரையும் சேர்த்துக் காலையில் மட்டும் இரண்டு அவுன்ஸ் வீதம் 21 நாட்கள் வரை உண்டு வர ஞாபகமறதி நீங்கும்.

* **(அல்சர்) குடல்புண் குணமாக:** சுத்த மான பாத்திரமொன்றில் 500 மி.லீற்றர் அளவு இளநீரை ஊற்றி அதில் 50 கிராம் மாதுளம் முத்துக்களைப் போட்டு பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் வரை மெல்லியதாக சூடேற்ற வேண்டும். பின்னர் அந்த முத்துக்களைப் பிழிந்து சாற்றை எடுத்து காலையும் மாலையும் 200மி.லீற்றர் என்ற அளவில் 10 நாட்களுக்கு பருகி வர குடல் புண் குணமடையும்.

* **இரத்தம் சுத்தமாக:** இரண்டு நாளுக்கொரு முறை மாதுளம்பழத்தை உண்டால் இரத்தம் சுத்திகரிக்கப்படும். புதிய இரத்தம் உருவாகும். உடலும் ஆரோக்கியமடையும்.

* **இரத்த பேதி குணமாக:** சிறிது வில்வம் இலைகளை எடுத்து கசாயம் செய்து அதில் மாதுளம்பழத்தின் தோலை அரைத்துக் கலந்து உண்டால் இரத்தபேதி நின்றுவிடும்.

* **இருதய நலத்திற்கும் இருதய பலத்திற்கும்:** மாதுளம்பழத்தை தினமும் காலையில் வெறும் வயிற்றில் உண்டால் இருதயம் நலம் பெறுவதோடு பலமும் பெறும்.

* **காசநோய் நீங்க:** 200 மில்லிகிராம் அளவுள்ள மாதுளம் பூவின் சாற்றில் அதே அளவு பசுநெய் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். இதனைக் காலை, மாலை 1 அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வர காசநோய் தீரும். இவ்வாறு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்காவது தவறாமல் பருகிவர வேண்டும்.



## மாதுளம்பழத்தில் ஏனைய பல நன்மைகள்

* எளிதில் சமிபாடடையும்.
* வாய் துர்நாற்றத்தைப் போக்கும்.
* நரம்புத்தளர்ச்சி நீங்கும்.
* நல்ல ஞாபகசக்தி பெருகும்.
* இரத்தம் சுத்தமாகும்.
* உடல் வெப்பம் சமமாகும்.
* நீரிழிவைக் கட்டுப்படுத்தும்.
* ஆஸ்துமாவைப் போக்கும்.
* விந்தைக் கெட்டிப்படுத்தும்.
* ஆண்மையை பெருக்கும்.
* சிறுநீர் எரிவைப் போக்கும்.
* முகத்திற்கு அழகைத் தரும்.
* வியர்வை நாற்றத்தைப் போக்கும்.
* வயிற்றுப் புண்ணை நீக்கும்.
* வாயுவை நீக்கும்.
* சருமத்தை மென்மையாக்கும்.

## மாதுளம்பழத்தில் உள்ள சத்துக்களின் அளவீடுகள்

| | |
|---|---|
| நீர் (ஈரப்பதம்) | - 79.0 கிராம் |
| கொழுப்பு | - 0.2 கிராம் |
| தாதுப்பொருள் | - 0.6 கிராம் |
| நார் | - 5.0 கிராம் |
| புரதம் | - 1.7 கிராம் |
| மாப்பொருள் | - 14.5 கிராம் |
| சக்தி | - 65.0 கலோரி |
| இரும்புச்சத்து | - 0.3 மில்லிகிராம் |
| சுண்ணாம்பு | - 9.0 மில்லிகிராம் |
| பொஸ்பரஸ் | - 70.0 மில்லிகிராம் |
| தயாமின் | - 0.05 மில்லிகிராம் |
| நியாசின் | - 0.2 மில்லிகிராம் |
| டைபோபிலியன் | - 0.9 மில்லிகிராம் |
| விற்றமின் 'சி' | - 16.0 மில்லிகிராம் |

* **சீதபேதி நீங்க:** மாதுளம்பழத்தின் தோலை அம்மியில் நன்கு அரைத்து அதில் எலுமிச்சம்பழ அளவு எடுத்து, அதனை எருமைத் தயிரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து மூன்று நாட்கள் பருகி வந்தால் சீதபேதி குணமடையும்.

* **தூக்கமின்மை குணமாக:** 300 கிராம் கருந்திராட்சைச் சாற்றுடன் அதேஅளவு மாதுளம் பழச்சாற்றையும் கலந்து அதனுடன் 2 தேக்கரண்டி தேனையும் கலந்து இரவுச் சாப்பாட்டுக்குப் பின் 30 நிமிடங்கள் கழித்து அருந்தவும். இவ்வாறு தொடர்ந்து 40 நாட்களுக்குப் பருகிவர தூக்க மின்மை குணமடையும். தொடர் தலைவலி நீங்கும்.மனதில் நிம்மதி ஏற்படும்.

அனைத்து உயிர்ச்சத்துக்களையும் கொண்ட இப்பழத்தை தினமும் உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்.

**-வீபாகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட, தென் அமெரிக்கா

## வட அமெரிக்கா

அமெரிக்கா கண்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ள கண்டம் வட அமெரிக்காவாகும். இக்கண்டமானது வடக்கே ஆர்க்டிக் சமுத்திரத்தாலும்


நியூயோர்க் நகரம்

கிழக்கே வட அட்லாண்டிக் சமுத்திரத்தாலும் மேற்கே வடபசுபிக் சமுத்திரத்தாலும் தெற்கே கரீபியன் கடலாலும் சூழப்பட்டுள்ளது. இது பரப்பளவில் மூன்றாவது பெரிய கண்டமாகவும் மக்கள் தொகையின் அடிப்படையில் நான்காவது பெரிய கண்டமாகவும் விளங்குகின்றது. இதன் பரப்பளவு 24,230,000 சதுர கிலோமீற்றர் ஆகும்.

## வட அமெரிக்க நாடுகள்

கனடா, மெக்சிகோ, ஐக்கிய அமெரிக்கா, கிறீன்லாந்து என்பனவாகும்.

அமெரிக்க கண்டத்தின் மத்திய கிழக்குப் பகுதியில் அட்லாண்டிக் சமுத்திரத்தின் மேற்கே, கரீபியன் கடல் பிரதேசத்தில் பல நாடுகள் (பல சிறிய தீவுகள்) அமைந்துள்ளன. அத்தீவுகள் பொதுவாக 'கரீபியன் நாடுகள்' என்றே அழைக்கப்படுகின்றன.

## கரீபியன் நாடுகள்

அன்டிகுவா-பார்புடா, கியூபா, கிரெனடா, போர்டோரிக்கோ, ஜமெய்க்கா, ஹெய்ட்டி, டிரினிடாட்-டுபேகோ, டொமினிக்கா, டொமினிக்கா குடியரசு, பஹாமாஸ், பார்படோஸ், சென் கிட்ஸ்-நெவிஸ், சென் லூசியா, சென் வின்சென்ட்-க்ரெனடின்ஸ், பனாமா, நிகரகுவா, ஹென்டியுரஸ், குவாதமாலா, எல்சல்வடோர், கொஸ்டாரிகா, பெலிஸ்.

பொருளாதார ரீதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா என்பன மிகவும் முன்னேற்றகரமானதாக விளங்குவதோடு, மெக்சிகோ நவீன தொழில் முறை நகரமாக மாறிவருகின்றது. கரீபியன் வளாகத்தில் பல்வேறு மட்ட அபிவிருத்தி நிலை நாடுகள் உள்ளன.




## மொழி, மதம் மற்றும் கலாசாரம்

ஆங்கிலம், ஸ்பானியம் மற்றும் பிரெஞ்ச் ஆகிய மொழிகள் வட



அமெரிக்காவில் பெரும்பாலானோரால் பேசப்படுகின்றன. கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஒருமித்த கலாசாரம், பாரம்பரியங்களை பெருமளவில் கொண்டுள்ளன. அவ்வாறே, கரீபியன் நாடுகளும் மெக்சிகோவும் பிரித்தானிய காலனித்துவத்துக்கு அடிமைப்பட்டு இருந்தமையால் இவ்விரு நாடுகளிலும் 'மாயா' நாகரிகத்துக்குட்பட்ட கலாசாரமும் நவீன கலாசாரமும் நிலவி வருவதைக் காணலாம்.

## தென் அமெரிக்கா

இக்கண்டத்தின் மேற்கில் தென் பசுபிக் சமுத்திரமும் தெற்கில் அண்டார்டிகா கண்டமும் கிழக்கில் தென் அட்லாண்டிக் சமுத்திரமும் வடக்கில் வட அமெரிக்கக் கண்டமும் உள்ளன. இது உலகின் தென் அரைப் பகுதியில் அமைந்துள்ளது. தென் அமெரிக்கா 17.8 மில்லியன் சதுர கி.மீற்றர் பரப்பளவு கொண்டது. தெற்கு வடக்காக சுமார் 7,600 கி.மீற்றர் நீளமும் கிழக்கு-மேற்காக ஏறத்தாழ 5,300 கி.மீற்றர் அகலமும் கொண்டது. இக்கண்டத்தி லுள்ள பெரும்பாலானோர் லத்தீன் மொழிவழிதோன்றிய ஸ்பானிய மொழிபேசுவதால், தென் அமெரிக்காவை 'லத்தீன் அமெரிக்கா' என்றும் அழைக்கின்றனர். பரப்பளவில் நான்காவது பெரிய கண்டமாகவும் மக்கள் தொகையில் ஐந்தாவது பெரிய கண்டமாகவும் இது விளங்குகின்றது.

ஐரோப்பிய சாம்ராஜ்ய சக்திகள் 16ஆம் நூற்றாண்டில் இருந்து தென்அமெரிக்காவில் தம் காலனிகளை உருவாக்கி வந்தன. இங்கிருந்த பூர்வீக குடிகளான செவ்விந்தியர்களை ஐரோப்பியர்கள் வேட்டையாடியும் அடிமைகளாக்கியும் மிகப்பெரிய சாம்ராஜ்யங்களைக் கட்டியெழுப்பினர். பின்னர் 1804 முதல் 1824 வரையிலான காலகட்டங்களில் நிகழ்ந்த சுதந்திரப் போர்களின் விளைவாக தென் அமெரிக்காவின் ஸ்பானிய காலனிகள் அனைத்தும் சுதந்திரம் பெற்றன.


மெக்சிகோ நகரம்


கொங்ரஸ் நூலகம்



## கலாசாரம்

பூர்வீக அமெரிக்க கலாசாரங்களான மாயா, இன்கா,மோச்சே,சிமு,அஸ்டெக் ஆகியவையும் ஐரோப்பிய இறக்குமதி கலாசாரங்களான ஸ்பானியம், போர்த்துக்கேயம், பிரெஞ்ச் என்பனவும் அடிமைகளாக வந்தவர்களின் ஆபிரிக்க கலாசாரமும் இணைந்த கூட்டினையே 'லத்தீன் அமெரிக்க கலாசாரம்' என்கின்றனர். லத்தீன் அமெரிக்காவின் முக்கிய மொழியாக ஸ்பானிய மொழி திகழ்கின்றது. ஆனால், தென் அமெரிக்கா கண்டத்தில் நிலப் பரப்பில் மிகப்பெரியதும் சனத்தொகையில் கூடியதுமான நாடாகிய பிரேசில் நாட்டில் மாத்திரம் போர்த்துக்கேய மொழி பேசப்படுகின்றது.

## தென் அமெரிக்க நாடுகள்

பிரேசில், ஆர்ஜன்டீனா, ஈக்வடோர், உருகுவே, கொலம்பியா, கயானா, சிலி, பேரு, பராகுவே, பொலிவியா, வெனிசுவெலா, சூரினாம்.


லிபர்ட்டி சிலை
நயாகரா



## தென் அமெரிக்காவின் சிறப்புக்கள்

- உலகின் மிகப் பெரிய நதி : அமேசன்
- உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி - ஏஞ்சல்ஸ்
- உலகின் மிகப் பெரிய மழைக்காடு - அமேசன் மழைக்காடு
- உலகின் மிக வறண்ட பாலைவனம் - அட்டகாமா
- மிக உயர்ந்த சிகரம் - அகன்காகுவா 6960 மீற்றர்
- தாழ்ந்த பகுதி - வால்டஸ்பெனின்

## வட அமெரிக்காவின் சிறப்புக்கள்

- உலகின் அகலமான நீர்வீழ்ச்சி - நயாகரா (கனடா-ஐக்கிய அமெரிக்கா)
- உலகில் அதிகளவு சீனி உற்பத்தி செய்யும் நாடு - கியூபா
- சுதந்திர சிலை - லிபர்ட்டி (நியூயோர்க் நகரம்)
- உலகின் பெரிய ஏரிகளின் தொகுதி - பறவைக்கால் ஏரி
- றொக்கி மலைத்தொடர்
- உலகின் பெரியதும் பழைமையானதுமான நூலகம் - கொங்ரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றத்தில் அன்றி, செயலில் உயர்ந்த ராணுவம்

## பிலிப்பைன்ஸ் ராணுவ வீரர்களின் உயரக்கட்டுப்பாடு



பிலிப்பைன்ஸ் நாட்டு ராணுவத்திற்கு புதிதாக ஆட்சேர்ப்பு நடத்தும்பொழுது குறிப்பிட்ட உயரம் உடையவர்களை மாத்திரம் இணைத்துக் கொள்வதற்கான சட்டதிட்டங்களையே அந்நாடு நடைமுறைப்படுத்தியிருந்தது. எனினும், இச்சட்டதிட்டத்திற்கு ஏற்ப, அதற்குத் தகுதியுடைய திறமையானவர்களைத் தெரிவு செய்வதில் பிலிப்பைன்ஸ் ராணுவம் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பிலிப்பைன்ஸ் ராணுவத் தலைமையகம் இனிமேல் தமது ராணுவத்திற்கு புதிய ஆட்சேர்ப்பினை நடத்தும் பொழுது ராணுவத்தில் இணையவுள்ளவர்களின் உயர அளவினைக் கருத்தில் கொள்வதில்லை எனவும் இதனால் முன்னைய நெறிமுறையினைக் கைவிடவும் தீர்மானித்துள்ளது.

### உயரம்

இதன்படி பிலிப்பைன்ஸ் ராணுவத்தில் தற்போது இணைவதற்கு விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடத்திலும் எதிர்பார்க்கப்படும் உயரம் 5 அடி மாத்திரமே. அதாவது 1.52 மீற்றராகும்.

இதற்கு முன்னர் ஆண்களின் உயரம் 5 அடி 4 அங்குலமாகவும் பெண்களின் உயரம் 5 அடி 2 அங்குலமாகவும் இருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை ராணுவத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு விண்ணப்பித்திருந்த இளைஞர், யுவதிகளிடையே பெரும்பாலானோர் குறிப்பிட்ட உயரத்தைக் கொண்டிராத பொழுதிலும் அவர்களிடம் நல்ல கல்வியறிவும் சிறந்த தொழில் தகைமைகளும் இருப்பதாக அந்நாட்டின் ராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். குறிப்பாக இவர்கள் மரவேலைகள்,மேசன் வேலைகளில் திறமை மிக்கவர்களாகவும், கணினி மென்பொருள் பொறியியல், கணினி தொழில்நுட்பவியல், மின்சார தொழில்நுட்பவியல், மோட்டார் தொழில்நுட்பம் மற்றும் பாரிய இயந்திர நிபுணத்துவம் உள்ளிட்ட பல கல்வி மற்றும் தொழில் திறமை கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். எனினும், இவர்கள் குறிப்பிட்ட உயரத்தினையுடையவர்கள் அல்லர்.

எனவே, இவர்களது விண்ணப்பங்களை நிராகரிக்காமல் தமது ராணுவ பலத்தை மேலும் அதிகரிக்கும் பொருட்டு உயரப் பிரச்சினையைத் தளர்த்தி, அவர்களையும் ராணுவத்தில் இணைத்துக்கொள்ள ராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

### உள்நாட்டு மோதல்

பிலிப்பைன்ஸ் ராணுவம் அந்நாட்டில் நீண்டகாலமாக செயல்பட்டு வரும் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுடன் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன்,பிலிப்பைன்ஸின் தென் பகுதியில் செயல்படும் ஆயுத பாணிகளான போராட்ட இயக்கத்தினருடனும் நீண்டகாலமாக பிலிப்பைன்ஸ் ராணுவம் போராடி வருகின்றது.

இத்தகைய நிலைமையில் தமது ராணுவத்தை சகல தரப்புகளிலும் ஒரு பரிபூரண ராணுவமாகப் பலப்படுத்த பிலிப்பைன்ஸ் அரசு தீர்மானித்துள்ளது. அது தமது நாட்டின் இறைமையை பாதுகாக்க பெரிதும் உதவும் என அந்நாட்டு அரசு கருதுகின்றது.

**ஜே.பீ.ஏ.விபாகர்**






## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

## விஜய் உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2009

### குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்

**தலைப்பு**

உற்பத்தித்திறன் கோட்பாட்டினை நாடு பூராவும் வியாபிக்கச் செய்வதில் செயற்படுகின்ற ஒரே அரச நிறுவனம் தேசிய உற்பத்தித்திறன் செயலகமேயாகும். இதன் கீழ் உற்பத்தித்திறன் மேம்பாட்டை கருத்திற்கொண்டு, 2009 ஆம் ஆண்டிலும் சித்திரப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

'குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்' என்ற தலைப்பிலேயே போஸ்டர் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 5,000 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 25,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2009.04.30**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

01. 1. மாவட்டம் ........................
போட்டிப் பிரிவு ........................
02. 1. முதல் பெயர்........................
(ஆங்கில தனியெழுத்தில்)
11. முழுப் பெயர் ........................
03. 1. முகவரி........................
(ஆங்கில தனியெழுத்தில்)
........................
........................
11. தொலைபேசி........................
04. வயது........................
05. 1. பாடசாலையின் பெயர்/முகவரி
........................
........................
11. வகுப்பு (தரம்) ........................
06. பல்கலைக்கழக மாணவர்களாயின்
1. பல்கலைக்கழகத்தின் பெயர்
........................
11. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
........................

........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

........................
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

**ஊடக அனுசரணை:**

விஜய்

மேலதிக விபரங்களுக்கு :-
தொலைபேசி 2812163/6, ஃபெக்ஸ் - 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk

பரிசு அனுசரணை: O-KAY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த உணவுகளை



நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு போசாக்குள்ள உணவு வகைகள் தேவைப்படுகின்றன. சந்தையில் உணவு வகைகளை வாங்கும்போது பழுதடையாத, உடல் ஆரோக்கியத்துக்குப் பொருத்தமான நல்ல உணவு வகைகளை வாங்குவதில் கூடுதல் கவனம்செலுத்தவேண்டும். ஆக, நாம் பழுதடைந்த உணவு வகைகளை இனங்காண்பது எப்படி? என்ற கேள்வி நம்மில் எழுகின்றதல்லவா? எனவே, அவ்வாறான பொருட்களை இனங்காண்பதற்கான சிறிய வழிகாட்டலே இது!

## உணவுகள் பழுதடைவதன் காரணம்

உணவு வகைகள் பழுதடையக் காரணம் அதில் உள்ள பக்றீரியாக்கள், வைரஸ்கள் உட்பட மேலும் பல நுண்ணுயிர்களின் தாக்கம் ஆகும். அத்துடன், உணவு வகைகள் பழுதடையாமல் இருக்கப் பயன்படுத்தப்படும் ரசாயனப் பதார்த்தம் காலாவதியாவதாலும் உணவு பழுதடைய நேரிடுகின்றது.

## உணவில் நுண்ணுயிர்களின் செயற்பாடு

உஷ்ண நிலை 30-65°C க்கு குறைவாகவும் வளியின் உட்புகும் நிலை 70% இற்கு அதிகமாகவும் இருந்தால் உணவில் நுண்ணுயிர்களின் செயற்பாடுகள் அதிகரிக்கும். அத்துடன், இருள் மற்றும் உணவில் புரதம் அதிகளவு இருக்கும் போதும் இந்நிலை ஏற்படலாம். புளித்தன்மை குறைவாக உள்ள உணவு வகைகளில் பக்றீரியாக்களின் பெருக்கம் அதிகளவு நிகழலாம். இவ்வாறு பக்றீரியாக்களின் செயற்பாடு அதிகரிக்கும்போதும் உணவு வகைகளின் இயல்பு நிலையில் மாற்றம் ஏற்படுகின்றது.

## புதிய மரக்கறி, பழவகைகளை இனங்காணல்

ஈரத்தன்மை உடையனவாகவும் வெளித்தோற்றம் பளபளப்பாகவும் இருந்தால் அவை புதியவையே.



மேலும், புதிய பழங்களிலும் மரக்கறிகளினதும் காம்புப் பகுதி எப்போதும் ஈரளிப்பாகவே இருக்கும்.இதற்கு மாறாக காம்புப் பகுதி கறுப்புப் புள்ளிகளுடன் காய்ந்து, சுருங்கியதாக அல்லது பூஞ்சணம் ஏற்பட்டதாக இருப்பின்.அவை புழு, பூச்சிகளின் தாக்கத்திற்கு உள்ளாகி பழுதடைந்த நிலையில் உள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.இன்னும் சில மரக்கறி, பழவகைகளின் மணமும் அவற்றின் பழுதடைந்த தன்மையைக் காட்டும். அவற்றின் இயற்கை மணத்தை விட மாறான மணம்வருமாயின் அது பழுதடைந்த தாகவே இருக்கும். மேலும், பாதுகாப்பற்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளவை மிருகங்களின் பற்கள் பதிந்த வைகள், கிருமிகளின் தாக்கத்திற்கு உட்பட்டவைகள், மனித உடலுக்குத் தீங்கிழைக்கக்கூடிய திரவங்கள் உள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ளவையும் பாவனைக்கு உகந்ததல்ல.

## டின்னில் அடைக்கப்பட்டவை

டின்னை உடைத்து உள்ளே இருக்கும் உணவைப் பார்க்கும்வரை அது பழுதடைந்துள்ளதா? இல்லையா? என்பதை நாம் அறியமுடியாது. எனினும், டின்னில் வெளிப்பகுதியில் துருப்பிடித்திருக்கின்றதா? அல்லது டின்னின் வெளியில் வேறு பாதிப்புக்கள், கசிவுகள் உள்ளனவா? என்பதையும் நாம் தீவிரமாக அவதானிக்க வேண்டும்.

உள்ளே இருக்கும் உணவு பழுதடைந்திருந்தால் மேலும் கீழுமாகப் பொங்கிய நிலையில் வெளித்தள்ளப்பட்டிருக்கும். டின் உணவுகளில் காலாவதியாகும் திகதி (Expiary date) முக்கியமானதாகும். எப்போதும் காலாவதியாகும் திகதியை மிகவும் அண்மித்திருந்தால் அதை வாங்காது தவிர்ப்பது நல்லது.

அத்தோடு, இத்தகைய உணவுகள்களஞ்சியப்படுத்தப் பட்டிருக்கும் இடமும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். அதிக சூரியஒளி படும்படி வைக்கப்பட்டிருந்தால் அந்த டின் உணவுகள் பாவனைக்குப் பொருத்தமற்றவையே. அவற்றைத் திறக்கும்போது வழமைக்கு மாறான சத்தத்துடன் வாயு வெளியேறு மாயின் இங்கு மென்பானங்களுக்கு இம்முறை பொருந்தாது. உள்ளே இருக்கும் உணவு பழுதடைந்திருக்கலாம். டின்னில் அடைக்கப்பட்டிருக்கும் உணவு பழுதடை யாமல் இருக்க பல ரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதோடு, அந்த திரவங்கள் அல்லது ரசாயனப் பதார்த்தங்கள் மாற்றங்களுக்குள்ளாகி இருந்தால் இந்நிலையை அவதானிக்கலாம். டின்னில் அடைக்கப்பட்ட உணவுகளைப் பயன்படுத்த முன்னர் அதில் சேர்க்கப்பட்டுள்ள சேர்வைகள் குறித்தும் கவனிக்கத் தவறாதீர்கள்.

## பெக்கட் செய்யப்பட்ட பால் பழுதடைந்திருந்தால்...

- கட்டியாகி, உறைந்திருத்தல்.
- இளம் ஊதா நிறமாகி, எண்ணெய் தன்மை ஏற்பட்டிருத்தல்.
- பூஞ்சணமணம்.
- மிதமிஞ்சிய புளிப்புச் சுவை.
- நுண்ணிய புழுக்கள் தென்படல்.

## பழுதடைந்த யோகட்

யோகட் எப்போதும் அதற்கே உரிய புளிப்புச் சுவையுடைய, பால் கலந்த




உணவாகும். புளிப்படையச் செய்யக்கூடிய பாவ களால் யோகட் பழுதடையாவிட்டாலும் வேறு நு காரணமாக பழுதடையலாம்.

யோகட் பழுதடைந்தால் அதன் வெளிப்புறத்தி

- திரவத்தன்மையுடையதாக இருத்தல்.
- மேல் அல்லது உட்புறமாக பூஞ்சணம் ஏற்பட
- லேசான துர்நாற்றம்.
- புளிப்புச் சுவை அதிகம்.

## பழுதடைந்த பா

பால்மா வகை எப்போதும் நன்கு உலர்ந்தவை புரதம் குறைவடைந்திருந்தால் நுண்ணுயிர்களின் செய்யப்படும்போது வளியகற்றப்பட வேண்டும். ஈரத்தன்மை அடைந்தால் நுண்ணுயிர்கள் உருவா பழுதடையும்.

- பால்மா கட்டியாகியிருத்தல்.
- நிறம் மாறி, சிலந்தி வலை போன்றிருத்தல்.
- இயல்பான வாசனைக்கு மாற்றமான வாசம்
- கறுப்பு,கபில நிறத்திலான பூஞ்சணம் மற்றும் நுண்ணுயிர்கள் இருத்தல் போன்றவை இதன்


பழுதடைந்த பாண்

பழுதடைந்த சொகலேட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளை அடையாளம் காண்போம்




## பழுதடைந்த சொகலேட்

சொகலேட் எப்போதும் சூரிஒளி அதிகளவு கிடைக்காத குளிர்ந்த இடத்திலேயே வைக்கப்பட வேண்டும். மரமுந்திரிகை மற்றும் பழவகை கலந்த சொகலேட்கள் ஏனைய சொகலேட்களை விட விரைவில் பழுதடையக்கூடியவையாகும். சொகலேட்டில் பழங்கள் மற்றும் மரமுந்திரிகையைச் சேர்க்கும்போது அவற்றில் பூச்சிகள் உருவாவதற்கான நிலை இருப்பின் அதுவே நாளடைவில் சொகலேட்டிலும் புழுக்கள் உருவாக வழிவகுக்கும்.

* இடையிடையே வெள்ளை நிறத்தில் பூஞ்சணப் படிவுகள் காணப்படல்.
* சொகலேட் கரைந்து, கொழுப்பின் பகுதி வேறாகியிருத்தல்.
* நுண்ணிய புழுக்கள் தென்படல்.

போன்ற அறிகுறிகள் காணப்படும்.

## பழுதடைந்த ஜேம்

* ஜேம் போத்தலின் மூடி வெளித்தள்ளப்பட்டு இருத்தல்.
* போத்தல் மூடியில் ஆங்காங்கே தூள் போன்று படிந்திருத்தல்.
* நுண்ணிய புழுக்கள் காணப்படல்.
* தயாரிப்புக்குட்பட்ட பழவகைகளின் வாசனைக்கு மாறான வாசம்.
* பழைய சீனியின் சுவை அல்லது எசிட், மதுசாரம் போன்ற வாசம் வெளிப்படல்.

...பக்கூடிய பாவனைக்கு உகந்த பக்றீரியாக் ...ாலும் வேறு நுண்ணுயிர்களின் தாக்கம்

...வெளிப்புறத்தில் கட்டி, கட்டியாகக் காணப்படும். ...ருத்தல். ...ஞ்சணம் ஏற்பட்டிருத்தல்.

* குமிழி, குமிழியாக இருத்தல்.
* திரவப் பகுதி, திண்மப் பகுதி என வேறுபட்டிருத்தல்.

## ...தடைந்த பால்மா

...த உலர்ந்தவையாக இருக்கும். பால்மா வகையில் ...ணுயிர்களின் தாக்கம் ஏற்படலாம். 'பெக்கட்' ...பட வேண்டும். மீறி வெளிக்காற்றுப்புகுந்து ...யிர்கள் உருவாகி விடும். அப்போது பால்மா

...பான்றிருத்தல். ...றமான வாசம். ...ஞ்சணம் மற்றும் புழுக்கள் போன்ற ...ான்றவை இதன் அறிகுறியாகக் காணப்படுகின்றன.

## கருத்தில் கொள்ளுங்கள்

எப்போதும் உணவுப் பொருட்களை வாங்கும்போது உற்பத்தி செய்யப்பட்ட திகதியையும் காலாவதியாகும் திகதியையும் கவனத்தில் எடுக்கவேண்டும். இவற்றை கவனிக்காது பொருட்களைக் கொள்வனவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

## பழுதடைந்த உணவு, பான வகைகள் குறித்து முறைப்பாடு செய்தல்

நீங்கள் கொள்வனவு செய்த உணவு மற்றும் பானங்கள் பழுதடைந்திருந்தால் அவற்றிற்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு உங்களால் முடியும். அத்தகைய முறைப்பாடுகள் நீங்கள் வாழும் பகுதிகளைச் சேர்ந்த

* சுகாதாரப் பரிசோதகர்
* நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை
* SLS சின்னம் உடைய உணவு வகையாயின் இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (Srilanka Stadered Institute) ஆகிய இடங்களுக்கு முறைப்பாடு செய்யலாம். அந்த முறைப்பாட்டுடன், பழுதடைந்த உணவுப் பண்டத்தையும் அனுப்பவேண்டும்.

முறைப்பாட்டைத் தபாலில் அனுப்புவதாயின் பழுதடைந்த உணவுப் பண்டத்தை தம்மிடம் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு முறைப்பாட்டை மட்டும் அனுப்பி வைக்கவேண்டும்.

## உள்நாட்டு உணவு வகையைப் பயன்படுத்துங்கள்

நீங்கள் எப்போதும் உணவு வகைகளைக் கொள்வனவு செய்யும் போது உள்ளூர் உற்பத்தியான எமது நாட்டு உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அவற்றில் பயன்படுத்தும் சேர்வைகளை இலகுவில் நீங்கள் தேடிப்பார்க்க முடியும். அத்துடன், குறைபாடுகள் இருப்பின் முறைப்பாடு செய்யவும் சட்டநடவடிக்கை எடுக்கவும் இலகுவாக இருக்கும்.

## முறைப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய தரவுகள்

இவ்வாறு நீங்கள் அவதானித்த பொருட்கள் பாவனைக்காலம் நிறைவடைந்து, காலாவதியானதாக அல்லது பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தால் அதுபற்றி இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யலாம். முறைப்பாடு செய்வதற்கு முன்னர் கவனிக்க வேண்டிய விடயங்களாவன;

* உணவின் வகை.
* விற்பனைப் பெயர்.
* உற்பத்தியாளரின் பெயர் முகவரி.
* வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாயின் இறக்குமதி செய்து விநியோகிப்பவரின் பெயர், முகவரி.
* பொதியிடப்பட்ட திகதி. * காலாவதியாகும் திகதி. * பிரிவு இலக்கம்.
* குறித்த உணவுப் பொருளை வாங்கிய இடத்தின் பெயர், முகவரி.

**முறைப்பாடுகள் அனுப்பப்படவேண்டிய முகவரி;**
**பணிப்பாளர் நாயகம்,**
**நுகர்வோர் அதிகார சபை, சதொச கட்டடம், 1 ஆம், 2 ஆம் மாடிகள்,**
**27, வொக்சோல் வீதி, கொழும்பு-02.**

என்ற முகவரிக்கு அல்லது 0112321696 என்ற உடனடி தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது

**இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (SLS),**
**17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

என்ற முகவரிக்கு அல்லது 0112671567-72 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ முறையிடலாம்.



**அமீர் ஹுஸைன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை தெரேசா

1910 ஒகஸ்ட் 26 ஆம் திகதி அல்பேனிய நாட்டில் ஸ்கோப்ஜே என்ற குக் கிராமத்தில் பிறந்தார் அன்னை தெரேசா. அன்னையின் ஆரம்பப் பெயர் கொன்ஸா அக்னஸ் (Gonxhe Agnes) ஆகும். 1928 ஆம் ஆண்டு துறவறத்திற்காக தனது இல்லத்திலிருந்து வெளியேறினார் அன்னை. 1929 ஜனவரி 6 ஆம் திகதி இந்தியாவின் கொல்கத்தா நகருக்கு விஜயம் செய்தார். 1946 செப்டெம்பர் 10 ஆம் திகதி இவர் புகையிரதத்தில் பயணம் செய்யும்போது இடைக்கிடையே கண்ணில் பட்ட சேரிகளும் அங்கு அலங்கோலத்தில் இருந்த சிறுவர்களும் அவர்களின் அவலங்களும் அன்னையின் மனதில் ஆழப் பதிந்தன. 1948 ஒகஸ்ட் மருத்துவமனையில் தாதிப் பயிற்சியை முடித்து மீண்டும் கொல்கத்தா திரும்பிய அன்னையார் அதே வருடம் டிசம்பரில் குஷ்டரோகிகள், அநாதைகள், ஏழைச் சிறார்களைச் சந்தித்தார். 1954 ஒக்டோபர் மாதம் அன்னையின் துறவற சபையானது உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப் பட்டது.

அன்னையார் கடைசிக் காலகட் டத்தில் நோயினால் அவதியுற்று 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார். இந்திய அரசு சகல அரச மரியாதைகளுடன் அன்னையாரின் பூதவுடலை அடக்கம் செய்தது. 2002 டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரால் அன்னையின் சேவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2003 ஆம் ஆண்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி அன்னைக்கு 'புனிதர்' பட்டம் வழங்கப்பட்டது.

## இலங்கையில் அன்னையின் நிலையங்கள்

- மாதம்பிட்டிய கருணை இல்லம்.
- முகத்துவாரம் சாந்தி நிவஸ.
- மொறட்டுவ பிரேம நிவஸ.

எஸ்.வை.பெனில்டஸ்,
கே/தெஹி/தல்துவை மு.ம.வித்.,
அவிசாவளை.



# ஆபத்து வருமுன்...

ஓர் அடர்ந்த காட்டின் நடுவே காட்டுப் பன்றி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒருமுறை அது தன் கொம்பை கூர்மையாக்கும் பொருட்டு மரமொன்றில் உரசிய படி இருந்தது. அவ்வேளையில், அங்கு வந்த குள்ளநரி ஒன்று அக்காட்டுப் பன்றியைப் பார்த்து, 'ஏன் இதற்கு இந்த தேவையில்லாத வேலை? இப்போது கொம்பைக் கூராக்குவதன் மூலம் எதனை சாதித்து விடப்போகிறது' என்று தனக்குள் நினைத்துக் கொண்டது.

பின்னர் அது காட்டுப் பன்றியைப் பார்த்து, ''தோழரே! என்ன செய்து கொண்டிருக்கிறீர்?''என்று கேட்டது. அதற்குக் காட்டுப்பன்றியோ ''எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்க என் கொம்பைக் கூர்மை ஆக்குகிறேன்'' என்றது. அதைக் கேட்ட நரி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது.





''என்ன தோழரே! இப்போது உம்முன்னால் எதிரிகள் எவரும் இல்லையே! ஏன் வீணாகக் கொம்பைக் கூர் ஆக்குகிறீர்?'' என்று வேடிக்கையாகக் கேட்டது.

அதற்குக் காட்டுப்பன்றி, ''உமக்கு எப்போதும் வேடிக்கைதான். நம் போன்றவர்களிடம் எதிரிகள் எப்போதும் குறுக்கிடுவார்கள். திடீரென எதிரி வந்து விட்டால் என்ன செய்வது? அதனால் தான் என் கொம்பை கூராக்கிக் கொண்டிருக் கிறேன். எந்த நேரமும் எமக்கு ஆபத்து ஏற்படலாம். அவற்றை எதிர்கொள்ள நாம் நம்மைத் தயார் படுத்திக் கொண்டிருப்பதே சிறந்த தாகும்'' என பதிலளித்தது.

காட்டுப் பன்றியின் வார்த்தை களைக் கேட்ட நரியோ, அதனை ஏளனமாகப் பார்த்து சிரித்தபடியே தன் இருப்பிடத்திற்கு செல்ல ஆயத்தமானது.

அந்த நேரத்தில் சற்றும் எதிர்பார்க்காத வகையில் பெரிய உறுமலோடு புலியொன்று நரியை யும் காட்டுப்பன்றியையும் தாக்க முற்பட்டது. ஆனால், காட்டுப் பன்றியோ தனது கூர்மையான கொம்பினால் புலியைத் தாக்கியது. காயப்பட்ட புலி வலி தாங்க முடியாமல். அவ்விடத்தில் இருந்து ஓடிச்சென்றது. பின்னர் நரி, காட்டுப் பன்றியை பார்த்து, ''ஆமாம் பன்றியாரே! நீங்கள் சொன்னது உண்மைதான். நாம் எந்த நேரத்திலும் எதற்கும் ஆயத் தமாக இருப்பதே சாலச்சிறந்தது. நீங்கள் தப்பித்தது மட்டுமல்லாமல் என்னையும் தப்பிக்க வைத்து விட்டீர்கள். உங்கள் உதவிக்கு மிக்க நன்றி'' எனக் கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து அகன்றது. அன்று முதல் நரியும் எதிரிகளிட மிருந்து தன்னைக் காத்துக்கொள்ள எந்நேரமும் தன்னை ஆயத்தப் படுத்திய வண்ணம் வாழக் கற்றுக் கொண்டது.

டி.ஹெலன்ராஜ்,
பது/ஊவா விஞ்ஞானக் கல்.,
ஹாலி-எல.


# உழைத்து வாழ்வோம்



பற்று வைப்போம்
தாய் தந்தை மீது
பக்தி வைப்போம்
தெய்வத்தின் மீது
கற்றிடுவோம்.
உயர்நிலைக் கல்வி
கற்றவற்றை
மற்றவர்க்கும் நன்கு
சொல்லி வைப்போம்.
சுற்றுச் சூழல்
காத்திடுவோம்.
சுயமாக உழைத்து
உண்டு வாழ்வோம்.

க.கஸ்தூரி, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்., திருகோணமலை.

# முட்டை மிதக்கும் ரகசியம்



நல்ல முட்டை கனமானது. நீரில் மூழ்கும். கெட்டுப் போன முட்டை நீரில் மிதக்கும். காரணம் என்ன தெரியுமா? முட்டை கெட்டுப் போகும்போது அதிலுள்ள திரவப் பொருட்கள் ரசாயன மாற்றம் பெற்று வாயுக் களாக மாறி முட்டையின் கோதின் வழியே வெளியேறுகின்றது. இதனால், கெட்டுப்போன முட்டையின் கனம் குறைந்து நீரில் மிதக்கின்றது.

★★★★

# சிரித்து மகிழ...

- தோசை சுடும்போது ஏன் மறுபக்கம் திருப்ப வேண்டும்? **அது தானாகத் திரும்பாது.**
- வீதி ஓரத்தில் ஏன் மரம் நடுகின்றனர்? **நடுவில் நட்டால் வாகனங்கள் பயணிக்க முடியாது.**
- ஒருவருக்கு 87 வயது. ஒரு நரை மூடி கூட இல்லை. ஏன்? **அவருக்கு முழு வழுக்கை.**
- 22 ஆம் நூற்றாண்டில் உலகம் எவ்வாறு இருக்கும்? **உருண்டை யாகத்தான் இருக்கும்.**
- ஒரு குடைக்குள் 8 பேர் செல்கின்றனர். ஒருவரும் நனையவில்லை. ஏன்? **மழை பெய்யவில்லையே.**
- முட்டையின் நடுவே என்ன உள்ளது? **'ட்' என்ற எழுத்து உள்ளது.**
- வீணை, புல்லாங்குழல் என்பவற்றில் எது வாசிப்ப தற்கு இலகுவானது? **வீணை. அதற்குத்தான் இரண்டெழுத்து.**

நி.ப.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.அஸ்மா, தரம் - 8,
பாத்திமா மு.ம.கல்.,
கொழும்பு.



க.சுதர்சன்,
தரம் - 13(கலை),
இராமகிருஷ்ணா கல்.,
அக்கரைப்பற்று-07.



எம்.யூ.எம்.அப்லல்,
தரம் - 2,
அல்-முர்ஷித் மு.ம.வித்.,
சில்மியாபுர.



ம.பவித்ரன், தரம் - 5,
புனித சில்வெஸ்டர் கல்.,
கண்டி.



எஸ்.ஜோதிகா,
லிட்டல் கிங்க்ஸ் பாலர் பா.,
திருகோணமலை.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2579
கி.லக்ஷன்யா,
தரம் - 8,
கார்மேல் பாத்திமா கல்.,
கல்முனை.


அங்.இல : 2580
ஐ.இஸ்ரத்,
தரம் - 11,
அல்-மர்ஜான் வித்.,
சம்மாந்துறை.


அங்.இல : 2581
கு.தல்சியா,
தரம் - 9,
கு.ம.வித்.,
முள்ளியவளை.


அங்.இல : 2582
எம்.ஆஷிம்,
தரம் - 8,
அந்நூர் ம.வித்.,
மட்டக்களப்பு.


அங்.இல : 2583
ரா.பானுஜன்,
தரம் - 2,
வடிவாம்பிகா த.ம.வித்.,
சிலாபம்.


அங்.இல : 2584
எஃப்.சப்னா,
தரம் - 6,
கே/உ.த.வித்.,
உந்துகொடை.


அங்.இல : 2585
ச.நிலானி,
தரம் - 11,
மு/து.அ.த.க.பாட.,
துணுக்காய்.


அங்.இல : 2586
எம்.அர்க்கம்,
தரம் - 5,
மதீனா தே.பாட.,
மடவளை பஸார்.


அங்.இல : 2587
எம்.தனுஷ்கர்,
தரம் - 5,
கதிரேசன் இ.ம.கல்.,
நாவலப்பிட்டி.


அங்.இல : 2588
எம்.சப்ரான்,
தரம் - 9,
பதுரியா ம.கல்.,
மாவனல்லை.


அங்.இல : 2589
எஸ்.அமாணீ,
தரம் - 6,
ஸாஹிரா கல்.,
கம்பளை.


அங்.இல : 2590
எஃப்.நபாஸா,
தரம் - 11,
அல்-ஹம்றா ம.வித்.,
தர்ஹா நகர்.


அங்.இல : 2591
ஆர்.ரொபிசன்,
தரம் - 6,
ப்ளெக்வோட்டர் த.வித்.,
கினிகத்ஹேன.


அங்.இல : 2592
எம்.ரூபன்,
தரம் - 9,
சிவானந்த த.வித்.,
கண்டி.


அங்.இல : 2593
எஸ்.றில்ஹானா,
தரம் - 7,
றோ.க.த.க.பாட.,
பேசாலை.


அங்.இல : 2594
எம்.ஜெஸ்மின்,
தரம் - 11,
சிராஜ் மு.ம.வித்.,
தம்பலகாமம்.


அங்.இல : 2595
எஸ்.உமாதேவி,
தரம் - 10,
டெம்பள்ஸ்டோவ்
த.வித்., றொசல்ல.


அங்.இல : 2596
கி.கோவூர்,
தரம் - 10B,
சரஸ்வதி ம.ம.வித்.,
பதுளை.


அங்.இல : 2597
பி.அனிதா,
தரம் - 3,
சிவானந்தா த.வித்.,
ஹந்தான.


அங்.இல : 2598
எம்.முர்சித்,
தரம் - 11,
மு.ம.வித்.,
வெளிமடை.

## இனி, நீங்கள் செய்ய வேண்டியது...

நாம் கொடுக்கும் தலைப்புக்களில் உங்கள் கைவண்ணங்களை வரைந்து அனுப்புங்கள்.

**தலைப்பு**

★ தரம் 1-5 – எனது குடும்பம் அல்லது மீன்
★ தரம் 6-8 – பூச்சாடி அல்லது நீர்வீழ்ச்சி
★ தரம் 9-11 – குருவிக்கூடு அல்லது பழக்கூடை

கைவண்ணங்களின் பின்பக்கத்தில் **உங்கள் பெயர், தரம், பாடசாலையின் பெயர், பாடசாலை அமைந்துள்ள இடம், கைவண்ணத்தின் தலைப்பு** என்பனவற்றை எழுதி **16.04.2009 இற்கு முன்னர்** எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். நேர்த்தியான, அழகான கைவண்ணங்களைப் பிரசுரித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்த 'விஜய்' காத்திருக்கின்றது.



அண்மையில் கல்முனை, ஹெல்பிங் ஹேன்ட்ஸ் இஸ்லாமிய பாலர் பாடசாலையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் பங்குபற்றி, பரிசுகளை வென்ற மாணவர்களையும் நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகள், பெற்றோர்கள் மற்றும் நிர்வாகிகளையும் படத்தில் காணலாம்.

*(தகவல்: நிப்றாஸ் மன்சூர், கல்முனை-05)*

விஜய்
'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



பமுனுதெனிய, செலான்கம வீதியைச் சேர்ந்த மொஹமட் நஸீம், ஏழாவது பிறந்த தினத்தை 03.04.2009 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் - எம்.நாகூர்பிச்சை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்திலும் வசந்திக்கும் மாமாவுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

මාමා: මම මේසයකුත් ගත්තා. රවුම් මේසයක්.
மம மேசயகுத் கத்தா. ரவும் மேசயக்.
மாமா: நான் ஒரு மேசையும் வாங்கினேன். வட்ட மேசை.

වසන්ති: මේසය කෝ මාමේ?
மேசய கோ மாமே?
வசந்தி: மேசை எங்கே மாமா?



මාමා: මේසය කෑම කාමරයේ. එන්න පෙන්වන්න.
மேசய கேம காமரயே. என்ன பென்வன்ன.
மாமா: மேசை சாப்பாட்டறையில் இருக்கின்றது. வா காட்டுகின்றேன்.

වසන්ති: හොඳ මේසේ මාමේ. මේ ලෑලි මොනවද මාමේ?
ஹொந்த மேசே மாமே. மே லேலி மொனவத மாமே?
வசந்தி: நல்ல மேசை மாமா. இது என்ன பலகை மாமா?

මාමා: මේවා තේක්ක දුවේ.
மேவா தேக்க துவே.
மாமா: இது தேக்கு மகள்.



වසන්ති: මේසය කීයද මාමේ?
மேசய கீயத மாமே?
வசந்தி: மேசை என்ன விலை மாமா?

මාමා: මේසය රුපියල් දහදාහයි.
மேசய ருபியல் தஹதாஹய்.
மாமா: மேசை பத்தாயிரம் ரூபா.

පුටු හය රුපියල් දහඅටදාහයි.
புடு ஹய ருபியல் தஹஅடதாஹய்.
ஆறு கதிரைகள் பதினெட்டாயிரம் ரூபா.

ඔක්කෝටම රුපියල් විසිඅටදාහයි.
ஒக்கோடம ருபியல் விசிஅடதாஹய்.
எல்லாம் இருபத்தெட்டாயிரம் ரூபா.



වසන්ති: මේස පුටු හරි ලස්සනයි මාමේ.
மேச புடு ஹரி லஸ்ஸணய் மாமே.
வசந்தி: மேசை கதிரைகள் அழகாக இருக்கின்றன மாமா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: நான் ஒரு மேசையும் வாங்கினேன்.
**මම මේසයකුත් ගත්තා.**



i. மேசை சாப்பாட்டறையில் இருக்கின்றது.
..............................................................

ii. மேசை பத்தாயிரம் ரூபா.
..............................................................




'Was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) He was in the shop.
அவன் கடையில் இருந்தான். (உடன்பாடு)

(ஆ) Was he in the shop?
அவன் கடையில் இருந்தானா? (வினா)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' வாக்கியத்தில் காணப்படுகின்ற 'was' எனும் துணை வினைச்சொல், அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம் பெறுகின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது. மேலும் உதாரணங்களை இங்கே பார்ப்போம்.

(இ) He was in the shop yesterday.
அவன் நேற்றுக் கடையில் இருந்தான். (உடன்பாடு)

(ஈ) Was he in the shop yesterday?
அவன் நேற்றுக் கடையில் இருந்தானா? (வினா)

---

(அ) She was at home.
அவள் வீட்டில் இருந்தாள். (உடன்பாடு)

(ஆ) Was she at home?
அவள் வீட்டில் இருந்தாளா? (வினா)

(இ) She was at home yesterday.
அவள் நேற்று வீட்டில் இருந்தாள். (உடன்பாடு)

(ஈ) Was she at home yesterday?
அவள் நேற்று வீட்டில் இருந்தாளா? (வினா)

---

(அ) It was on the roof.
அது கூரையின் மேல் இருந்தது. (உடன்பாடு)

(ஆ) Was it on the roof?
அது கூரையின் மேல் இருந்ததா? (வினா)

(இ) It was on the roof yesterday.
அது நேற்றுக் கூரையின் மேல் இருந்தது. (உடன்பாடு)

(ஈ) Was it on the roof yesterday?
அது நேற்று கூரையின் மேல் இருந்ததா? (வினா)

---

(அ) Nimal was in the office yesterday.
நிமால் நேற்று அலுவலகத்தில் இருந்தான். (உடன்பாடு)

(ஆ) Was Nimal in the office yesterday?
நிமால் நேற்று அலுவலகத்தில் இருந்தானா? (வினா)

(அ) Mary was in school yesterday.
மேரி நேற்று பாடசாலையில் இருந்தாள். (உடன்பாடு)

(ஆ) Was Mary in school yesterday?
மேரி நேற்று பாடசாலையில் இருந்தாளா? (வினா)

---

(அ) This dog was in the garden yesterday.
இந்த நாய் நேற்றுத் தோட்டத்தில் இருந்தது.

(ஆ) Was this dog in the garden yesterday?
இந்த நாய் நேற்றுத் தோட்டத்தில் இருந்ததா?

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ரஷ்யாவில் சிறுவர்கள் இரவில் வெளியே செல்லத் தடைவிதிப்பு



ரஷ்யாவிலுள்ள சிறுவர்கள் இரவு நேரங்களில் தனியே வெளியே செல்வதற்கு அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இதன்படி, இரவு 10 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணி வரையான நேரங்களில் சிறுவர்கள் தனியாக சுற்றித்திரிதல், அரங்குகளில் விளையாடுதல், பூங்காக்களுக்கு செல்லல், பஸ்களில் பயணம் செய்தல் என்பனவற்றுக்கு அனுமதி வழங்கப் படமாட்டாது.

ரஷ்யாவில் அண்மைக்காலமாக 18 வயதிற்கு கீழானோர் மீது வன்முறைகள் நடைபெற்று வருவதுடன், இந்த வயதிலுள்ள இன்னும் சிலர் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இத்தகைய குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகவே மேற்படி தடைச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்த சட்டத்தை மீறுகின்ற சிறுவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்பதுடன், சிறுவர்களின் பெற்றோர் மீதும் அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

# சூடாக தேநீர் அருந்தினால் உணவுக் குழாயில் புற்றுநோய்



## ஆராய்ச்சிகளில் கண்டுபிடிப்பு

சூடாக தேநீர் அருந்துபவர்களுக்கு உணவுக் குழாயில் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. ஈரான் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலமே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

மேற்படி, ஆராய்ச்சிகளின்படி 70 பாகை செல்சியஸுக்கு அதிகமான வெப்பத்துடன் கூடிய தேநீரை அருந்துகின்றவர்களுக்கு உணவுக் குழாயில் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக குறித்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆராய்ச்சிகளுக்கென சூடான தேநீர்



அருந்துகின்ற ஐநூறுக்கும் மேற்பட்டவர்களில் ஆய்வினை மேற்கொண்டபோது அவர்களில் 300 இற்கும் மேற்பட்டவர்களுக்கு உணவுக் குழாயில் புற்றுநோய் அறிகுறிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்படி, 65 பாகைக்கு செல்ஸியஸுக்கு குறைவான சூட்டிலுள்ள தேநீரை அருந்துவதே நல்லதெனவும் அதற்கும் அதிகமான சூட்டுடன் அருந்துபவர்களுக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு எட்டு மடங்காக இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# ஈராக்கிற்கு பிரிட்டன் ராணுவத்தை அனுப்பியமை தொடர்பாக விசாரணை

ஈராக்கில் போர் புரிவதற்காக 2003 ஆம் ஆண்டில் பிரிட்டன் படைகளை அனுப்பியமை தொடர்பாக



முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரிட்டன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், வருகின்ற ஜூலை மாதமளவில் ஈராக்கிலுள்ள பிரிட்டன் படைகள் முழுமையாக மீள வரவழைக்கப் பட்ட பின்னரே இந்த விசாரணைகள் நடைபெறும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு ஜூலை மாதத்தின் பின்னரே விசாரணைகள் நடைபெறும் என்று கூறப்படுகின்றமையால் எதிர்க்கட்சிகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

பிரிட்டனில் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளமையால் தேர்தலுக்கு முன்னதாக இந்த விசாரணை முடிவுகள் வருவதை ஆளும் கட்சி விரும்பாததன் காரணத்தினால் விசாரணைகள் தாமதப்படுத்தப்படுவதாகவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

ஈராக்கிற்கு அமெரிக்கா தலைமையிலான பிரிட்டன் படைகளும் போரிடச் சென்றிருந்த போதிலும் அதற்குரிய நியாயமான காரணங்கள் சரிவர உறுதிப்படுத்தப்படாத நிலையில், ஈராக்கிற்கு பிரிட்டன் படைகளை அனுப்பியமை தவறான ஒரு முடிவு என்ற தீர்ப்பு வந்துவிட்டால் அது தேர்தலில் ஆளும் கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்திலேயே அது குறித்தான விசாரணைகளை ஆளும் கட்சி தாமதப்படுத்துகின்றதென்று எதிர்த்தரப்பினர் கூறுகின்றனர்.

**அற்லஸ் கேள்வி - 198**

**கேள்வி:** தேநீரை அதிக சூட்டுடன் அருந்துவது நல்லதல்ல என்று எந்த நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்?

**சரியான விடை.......................................**

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 198,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 196 இன் சரியான விடை: அத்வானி**

**பரிசு பெறுவோர்**

வி.மங்கலேஸ்வரன்,
வடக்கு பூண்டுலோயா,
மேல்பிரிவு, பூண்டுலோயா.

ஃபாத்திமா ரிஃப்னாஸ்,
141/12A, மடவல, கட்டுகஸ்தோட்டை, கண்டி.

ஆர்.சச்சின்,
58/11, சென்.ஜோசப் வீதி, கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1937 இல் உற்பத்தியான 'புகாட்டி'




**1937 ஆம் ஆண்டு உற்பத்தியாக்கப்பட்ட, 'புகாட்டி' என்ற பெயர் கொண்ட 'ஸ்போட்' ரக மோட்டார் வாகனமொன்று எதேச்சையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Bugatti Type 57S Atalante என்றழைக்கப்படும் இந்த வாகனத்தின் கண்டுபிடிப்பு குறித்த செய்தியானது, பழைய வாகன சேகரிப்பாளர்களுக்கு அறியக்கிடைத்த பிரபல்யமான செய்தியாகும். அந்தளவுக்கு இது மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே, மிகப்பழைமையான அரிய வகை சொத்தாகவும் இதனைக் குறிப்பிடலாம்.**

மருத்துவரான ஹெரல்ட் கா என்பவருக்கு சொந்தமான இந்த வாகனம், அவரின் மறைவுக்குபின்னர் அவரது உறவினர்களினால் வட இங்கிலாந்தில் நியூகாசலை அண்மித்த கொஸ்ஃபோத் கிராமத்திலுள்ள அவரது சொந்த வாகனத்தரிப்பிடத்தில் வைத்துக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

தூசி படிந்து அழுக்காக இருந்த இந்த வாகனம், 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயக்கப்படாததால் அதனை சரிப்படுத்தி, மீண்டும் பாவனைக்குட்படுத்தக்கூடிய வாகனமாக மாற்றலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அன்று இவ்வாறான வாகனங்கள் 17 மட்டுமே உற்பத்தியாக்கப்பட்டிருந்தன. தற்போது இந்த வாகனம் கண்டுபிடிக் கப்பட்டுள்ள நிலையில், ஹெரல்ட் காவின் உறவினர்கள் வாகனத்தினை சரிப்படுத்தி, பெரிசில் நடைபெறவுள்ள 'ரெட்ரோ மொபைல்' மோட்டார் வாகனக் கண்காட்சியில் அதனை 8.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் விட திட்டமிட்டுள்ளனர். 'ஸ்போட்' ரக வாகனத்தின் மைல் கல்லாக கருதப்படும் இந்த 'புகாட்டி' வாகனம், அன்று தயாரிக்கப்பட்ட மணிக்கு 50 மைல் வேகத்தில் செல்லும் வாகனங்களுடன் ஒப்பிடும் பொழுது, மணிக்கு 209 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. 1955 ஆம் ஆண்டு மருத்துவர் ஹெரல்ட் காவினால் இந்த வாகனம் கொள்வனவு செய்யப்படுவதற்கு முன்னர் பிரித்தானியாவில் வாழ்ந்த புகழ்பெற்ற மோட்டார் வாகன ஓட்டுநரான ஏர்ள் ஹோவ் என்பவர் எட்டு ஆண்டுகள் இந்த வாகனத்தின் உரிமையாளராக இருந்துள்ளார். எனவே, அதன் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.





அவரை அடுத்து மேலும் மூவர் அதனை உரித்தாக்கிக் கொண்டுள்ளனர்.

இந்த வாகனத்தின் உதிரிப்பாகங்கள் எதுவும் மாற்றப்படாமை அதன் பெறுமதி அதிகரிப்புக்கான மற்றுமொரு காரணமாகும். ''பழைய வாகன சேகரிப்பாளர்கள் எதிர்பார்க்கும் அனைத்து விடயங்களும் இந்த வாகனத்தில் அடங்கியுள்ளன. இது 1930 களில் 'ஸ்போட்' மோட்டார் வாகனத் தயாரிப்பில் முக்கியத்துவம் கொண்ட முத்திரை பதித்த வாகனம் என்று கூறாமல் இருக்கமுடியாது'' என மோட்டார் வாகன ஏலவிற்பனைக்கான சர்வதேச மோட்டார் திணைக்களத்தின் தலைவர் ஜேம்ஸ் நைட் கூறினார்.

சத்திரசிகிச்சை நிபுணரான ஹெரல்ட் தனது 89 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார். அவரது உறவினர்களின் கருத்தின்படி,அவர் பழையபொருட்களை வீசியெறிய ஒருபோதும் விரும்பியவர் அல்லர் என்று தெரியவந்துள்ளது.

'புகாட்டி' வாகனம் அதன் வேகம் மற்றும் அதன் இலகு செயற்பாடுகள் காரணமாக பிரபலமடைந்ததாகக் கூறப்படுகின்றது. அதே போன்று 1920 மற்றும் 30 களில் மோட்டார் வாகன வெற்றிகள் பலவற்றுக்கு 'புகாட்டி' ரக வாகனங்களே உரிமை கொண்டுள்ளன. அதில் 57S Atalante ரக புகாட்டி முக்கிய இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதன் அனைத்துப் பாகங்களும் கைகளினால் தயாரிக்கப்பட்டவையாகவும் இருந்துள்ளன. எட்டோரே புகாட்டி என்பவரால் 1909 இல் ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் நிறுவனத்தினாலேயே இந்த வாகனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நாளடைவில் இந்நிறுவனம் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, 1998 இல் 'புகாட்டி' வாகனப் பெயர் 'வொக்ஸ்வேகன்' நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அதனை அடுத்து அந்த நிறுவனத்தினால் 'புகாட்டி வெய்ரொன்' என்ற பெயரில் உலகில் மிக வேகமான மற்றும் விலை அதிகமான வாகனம் உற்பத்தி ஆக்கப்பட்டு சந்தைக்கு விடப்பட்டுள்ளது.






## சென்னை மாநகராட்சி




**இலங்கையின் அண்டை நாடான இந்தியாவில் உள்ள ஒரு மாநகரம் பற்றி பல சுவையான தகவல்கள் இருக்கின்றன.ஆம்! அதுதான் தமிழகத்தின் தலைநகர் சென்னை. சென்னை பற்றிய ஒரு தகவல்!**

முற்காலத்தில் போர்த்துக்கேயர், ஸ்பானியர், ஒல்லாந்தர், பிரான்சியர், பிரித்தானியர் என பல ஐரோப்பிய நாட்டினரும் உலகெங்கும் பல நாடுகளைக் கைப்பற்றி, அங்கு தமது குடியேற்றங்களை நிறுவினர். அவர்களில் ஒல்லாந்து, பிரெஞ்ச், பிரித்தானியா போன்ற நாட்டினர் இந்தியாவில் முறையே; ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம், பிரெஞ்ச் கிழக்கிந்திய வர்த்தக சங்கம், பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் என வர்த்தக சங்கங்களை அமைத்து, தமது வர்த்தகத்தைப் பெருக்கவும் குடியேற்றத்தை உருவாக்கவும் முயன்றனர். அந்த வகையில் பிரித்தானியர் தமது கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் தலைநகராக சென்னையைத் தெரிவு செய்து, அங்கு தமது சங்கத்தை நிறுவினர்.

இது, நாளடைவில் இந்தியாவில் மட்டுமன்றி, தெற்காசியாவிலேயே முதலாவது மாநகராட்சியாக வளர்ச்சி அடைந்தது. 1688 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி ஆரம்பிக்கப்பட்டது.அன்றிலிருந்து 1753 ஆம் ஆண்டு வரை நிதி நிலைமைகளை மாநகராட்சியே கவனித்து வந்தது.தெற்காசியாவில் பேருந்து போக்குவரத்தையும் வானொலி ஒலிபரப்பையும் கூட முதலில் ஆரம்பித்த பெருமை சென்னை மாநகராட்சிக்கே உண்டு.

### சென்னையை விற்றவர்

இத்தகைய பெருமைகள் நிறைந்த சென்னையை, அது மாநகராட்சியாவதற்கு முன்னர் அதாவது 1639 இல் ஒருவர் ஆங்கிலேயருக்கு விற்றார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால், அதுதான் உண்மை. சந்திரகிரி நாயக்கர் என்பவர், 1639 ஆம் ஆண்டு சென்னைப் பட்டணத்தை சந்திரகிரி மன்னனின் பிரதிநிதி ஐயப்ப நாயக்கரிடமிருந்து வாங்கி, ஆங்கிலேயருக்கு விற்பனை செய்துள்ளார். ஆங்கிலேயரும் அதனை விலைக்கு வாங்கி, பண்டகசாலை ஒன்றை அமைத்து, அதைப் பாதுகாக்க புனித ஜோர்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். அத்துடன், பிரித்தானியர்கள் கிறிஸ்தவ சமயப் பரப்புதலையும் நாயக்கர்கள் காலத்தில்தான் ஆரம்பித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் வாழ்ந்து வந்த குள்ளநரிக்கு ஒருநாள் ஊரில் போய் வாழ ஆசை வந்தது. அதன்படி ஊருக்குள் வந்த நரியைக் கண்டு மக்கள் ஓட்டம் பிடித்தனர் நரியோ ராஜா போல ஊருக்குள் வலம் வந்தது. அப்போது ஒரு கழுதை பொதி சுமந்துகொண்டு வந்தது. அதைக் கண்ட நரி, ''ஏய் கழுதையே... உன்னை இந்த மக்கள் பொதி சுமக்க வைத்துக் கொடுமைப்படுத்துகிறார்கள். நீயோ அது புரியாமல் அடிமையாக இருக்கிறாயே?'' என்று ஏளனமாகக் கேட்டது.

''ஏதோ என்னால் முடிந்த உதவிகளைச் செய்துகொண்டு மக்களுக்குப் பயனுடையவனாக இருக்கிறேன்'' என்று அடக்கமாகக் கூறியது கழுதை.

''உன்னிடம் போய் இதைச் சொன்னேன் பார். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?'' என்று நரி எள்ளி நகையாடியது. கழுதையோ மனவருத்தத்துடன் சென்றுவிட்டது. அதன் பின் ஒரு காளைமாடு பாரவண்டியை இழுத்துக்கொண்டு வந்தது. அதைக் கண்ட நரி அருகே போய், ''காளையே... உனக்கு ஏன் இந்த விதி?'' என்றது.

அதற்குக் காளைமாடு, ''மக்கள் எனக்கு உணவு அளிக்கிறார்கள். உறைவிடம் கொடுக்கிறார்கள். வருடத்துக்கு ஒருநாள் எங்களுக்காக பொங்கல் வைத்துக் கொண்டாடுகிறார்கள். அதற்குக் கைமாறாகத் தான் நான் வண்டி இழுக்கிறேன், பசு பால் கொடுக்கிறது'' என்றது.

''உனக்கு மனிதர்கள் லாடம் அடிக்கிறது சரிதான்'' என்றது நரி. ஒன்றும் கூறாமல் வண்டியை இழுத்துச் சென்றது காளை. நரிக்குப்

# ஊருக்குள் வந்த நரி





பசியெடுக்கவே, அருகில் இருந்த வயலுக்குள் புகுந்தது. அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்களை மிதித்து நாசப்படுத்தியது. கிழங்கு, கெரட், கடலை வகைகளை நன்கு தின்று பசியாறியது. அருகே கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் மேய்ந்து கொண்டிருந்தது. நரி சிரித்தபடி கோழியிடம் வந்தது. ''முட்டாள் கோழியே.... இங்கு என்ன செய்கிறாய்?'' என்று கேட்டது.

''நான் எனது குஞ்சுகளுடன் இரை தேடுகிறேன்'' என்றது கோழி.

''மக்களுக்கு முட்டைகளையும் கொடுத்து உன்னையே உணவாகவும் கொடுக்கிறாயே. உனக்கு என்ன பைத்தியமா?'' என்று கேட்டது.

அதற்குக் கோழி, ''எங்களை மக்கள்தான் வளர்க்கிறார்கள். அதற்காக நான் உயிரையும் கொடுப்பேன்'' என்றது. 'முட்டாள் கோழி' எனக் கூறியபடி நரி மேலும் நடந்து சென்றது. நரியைக் கண்டு பயந்த மக்கள் ஊர்த் தலைவரிடம் சென்று முறையிட்டனர். சிலர், 'நரி எங்கள் பயிர்களை நாசப்படுத்திவிட்டது! கிழங்கு, கடலை, கெரட் வகைகளைத் தோண்டித் தின்றுவிட்டது' என்று கூச்சலிட்டனர்.

நரியை அடித்துத் துரத்தவேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்தனர். அதைக் கேள்விப்பட்ட கழுதை, காளைமாடு, கோழி எல்லாம் ஒன்று சேர்ந்து நரியிடம் போய் ஊர் நிலைமைகளைக் கூறின. ''நரியாரே! மக்கள் உங்களை அடித்துத் துரத்தவருகிறார்கள். நீங்கள் சீக்கிரம் காட்டுக்குத் தப்பிச் சென்றுவிடுங்கள்'' என்று கூறின. தூரத்தில் மக்கள் கம்பு, தடி, உலக்கை, துடைப்பம் சகிதம் வருவது அதற்குத் தெரிந்தது.

அதைக் கண்டு பயந்த நரி, ''நான் உங்களை ஏளனமாக பேசியதைக்கூடப் பொருட்படுத்தாமல் என்னைக்காப்பாற்ற வந்திருக்கிறீர்கள். உங்களின் நல்ல குணத்துக்குத்தான் மக்கள் உங்களை வளர்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். என்னை மன்னியுங்கள்'' என்றபடி மீண்டும் காட்டுக்கே திரும்பியது.




முன்னொரு காலத்தில் பெரேந்தி என்ற பெயருடைய அரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் இவான் என்று அழைக்கப்பட்டான். அரசரின் அழகிய தோட்டத்தில் தங்க ஆப்பிள்கள் காய்க்கும் ஆப்பிள் மரம் ஒன்று இருந்தது.

தனது தோட்டத்திற்கு யாரோ வந்து தங்க ஆப்பிள்களைத் திருடிக் கொண்டு போவதாக அரசர் ஒருநாள் அறிந்தார். இதனால், அவர் மிகவும் கவலையுற்றார். தோட்டத்திற்குக் காவல்காரர்களை நியமித்தார். ஆனால், அவர்களால் திருடனைப் பிடிக்க முடியவில்லை. இது அரசருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது. இதனால் உணவையோ, நீரையோ அவர் தொடவில்லை. அவருடைய மகன்கள் அரசருக்கு ஆறுதல் சொல்ல முயன்றனர்.

''கவலைப்பட வேண்டாம் எம் அருமைத் தந்தையே! தோட்டத்தை நாங்களே காவல் காப்போம்'' என்றனர்.

மூத்த மகன் சொன்னான், ''இன்று காவல் இருப்பது என்னுடைய முறை''

அவன் தோட்டத்திற்குள்ளாகச் சென்றான். அவன் நீண்ட நேரமாக நடந்தும் யாரையும் காணவில்லை. ஆகவே, மென்மையான புல்லின் மீது படுத்துத் துங்கிப் போனான். காலையில் அரசர் அவனிடம் கேட்டார். ''மகனே! எனக்கு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறாயா? திருடன் யார் எனக் கண்டுபிடித்து விட்டாயா?''

''இல்லை எம் அருமைத் தந்தையே! இரவு முழுக்க நான் கண்களை மூடவில்லை. ஆனால், யாரையும் நான் காணவில்லை''

மறுநாள் இரவு காவல் காக்க இரண்டாவது மகன் சென்றான். அவனும் தூங்கிப் போய்விட, யாரையும் தான் பார்க்கவில்லை என்று காலையில் சொன்னான். இப்போது, காவலுக்குப் போவது இளைய மகனுடைய முறை. இளவரசன் இவான் தனது தந்தையினுடைய தோட்டத்தைக் காவல்காக்கச் சென்றான். அவன் படுக்கத்



துணியவில்லை. ஏன், உட்காருவது பற்றியும் சிந்திக்கவில்லை. தூக்கம் வருவது போல உணர்ந்தால், பனித் துளியால் முகத்தைக் கழுவிக்கொண்டு, திரும்பவும் நன்கு விழித்திருப்பான்.

பாதி இரவு சென்றது. திடீரென்று தோட்டத்தில் வெளிச்சம் மின்னுவதைப் பார்த்தான். அது மென்மேலும் பிரகாசமாகிக் கொண்டே வந்தது. சுற்றியுள்ள எல்லாவற்றுக்கும் அது ஒளியூட்டியது. இளவரசன் இவான் அதனை உற்றுப் பார்த்தான். அது ஒரு தீப்பறவை. அது ஆப்பிள் மரத்தில் ஆப்பிள்களைக் கொத்திக் கொண்டிருப்பதைக் கண்டான்.

இளவரசன் இவான் மரம் வரை ஊர்ந்து சென்று அதன் வாலைப் பற்றிப் பிடித்தான். ஆனால் தீப்பறவை அவனது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு பறந்து சென்றுவிட்டது. ஆனால் அதன் ஓர் இறகு மட்டும் அவன் கையில் சிக்கியது. காலையில் இளவரசன் இவான் தன் தந்தையிடம் சென்றான்.

''மகனே, நீ திருடனைப் பிடித்து விட்டாயா?'' எனக் கேட்டார் அரசர்.

''இல்லைத் தந்தையே! அதை நான் பிடிக்கவில்லை. ஆனால் அது யார் என்று நான் கண்டுபிடித்து விட்டேன். பாருங்கள், இந்த இறகை ஒரு நினைவுப் பொருளாக தங்களுக்குக் கொண்டு வந்திருக்கின்றேன். தீப்பறவைதான் திருடன்'' என்றான் இளவரசன் இவான்.

அரசர் அத்தீப்பறவையின் இறகை எடுத்துக் கொண்டார். அப்போதிலிருந்து அவர் திரும்பவும் மகிழ்ச்சியுடையவராக மாறி உண்ணவும் குடிக்கவும் தொடங்கினார். ஆனால், ஒருநாள் தீப்பறவையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிய அவர், தனது மகன்களை அழைத்துக் கூறினார்; ''எனது அருமை மகன்களே, உங்களுடைய நம்பகமான குதிரைகளுக்குச் சேணம் பூட்டி, பரந்த உலகத்தைப் பார்க்கப் புறப்படுங்கள். தொலைதூரத்து எல்லா மூலைகளிலும் நீங்கள் தேடினால் ஒருவேளை அத்தீப்பறவையைக் காணக்கூடும்''

மகன்கள் தங்களுடைய தந்தைக்குத் தலைவணங்கி, நம்பகமான குதிரைகளுக்குச் சேணம் பூட்டிப் புறப்பட்டார்கள். மூத்தமகன் ஒரு சாலையிலும் நடுமகன் மற்றொன்றிலும் இளவரசன் இவான் மூன்றாவது சாலையிலும் சென்றனர்.

இளவரசன் இவான் எவ்வளவு தூரம் சென்றான் என்றே தெரியவில்லை. கோடையாகவும் மிகுந்த வெப்பமாகவும் இருந்ததால் பெரும் களைப்புற்று தனது குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். அக்குதிரை தன்னை விட்டு வெகுதூரம் போய்விடாதபடி இருப்பதற்காக அதனது கால்களைக் கட்டிப் போட்டுவிட்டு, இவான் புல்லின் மீது படுத்துத் தூங்கிப் போனான்.

அவன் எவ்வளவு நேரம் தூங்கினானோ தெரியவில்லை. அவன் கண் விழித்தெழுந்தபோது அவனது

**தீப்பறவை அவனது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு பறந்து சென்றுவிட்டது. ஆனால் அதன் ஓர் இறகு மட்டும் அவன் கையில் சிக்கியது**

குதிரை அங்கு இல்லாததைக் கண்டு அதைத் தேடிப் புறப்பட்டான். நீண்ட தூரம் நடந்து போய்க்கொண்டே இருந்தான். பாவம், இறுதியில் அக்குதிரையின் எலும்புகளை மட்டுமே கண்டு திகைப்புற்றான். இதனால், இளவரசன் இவான் பெரிதும் துயருற்றான். குதிரை இன்றி அவனால் எப்படிப் பயணத்தைத் தொடர முடியும்? என்ன பரிதாபம். ஆனால், மேலும் போயாக வேண்டும் என்று நினைத்தான்.

கால்நடையாகச் சென்றான். கால்கள் வலி எடுக்குமளவுக்கு மென்மேலும் நடந்தான். இதனால், ஏற்பட்ட களைப்பினால் அங்குள்ள மென்மையான புல்லின் மீது உட்கார்ந்து கொண்டான். தனது பயணம் குறித்து அவன் மிகுந்த கவலையும் சோகமும் அடைந்தான். திடீரென்று சாம்பல் நிற ஓநாய் ஒன்று அவனை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதன்மை போட்டிகளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தல்



இனிவரும் காலங்களில் சர்வதேச மட்டத்தில் நடைபெறுகின்ற முதல்நிலைப் போட்டிகளின் போது போட்டியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பாதுகாப்பினை மேலும் அதிகரிப்பதற்கு சர்வதேச மெய்வல்லுனர் நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை கிரிக்கெட் அணி மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இங்கிலாந்தில் நடைபெறவுள்ள 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகள், அடுத்த வருடம் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ள 'பீ்ஃபா' உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள், அதே வருடத்தில் மே.இ.தீவுகளில் நடைபெறவுள்ள மகளிர் கிண்ண 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகள், அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ரக்பி கிண்ணப் போட்டிகள், 2012 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகள் ஆகிய போட்டிகளே மேற்படி சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ள போட்டிகளாகும்.

# 400 மீற்றரில் தங்கம் வெல்வதே நோக்கம்

## உசேன் போல்ட் தெரிவிப்பு

உலகின் வேகமான ஓட்டவீரர் என்று கருதப்படுகின்ற ஜெமெய்க்காவின் குறுந்தூர ஓட்ட வீரர் உசேன் போல்ட் இந்த வருடத்தில் முதல் தடவையாக சர்வதேச மட்டத்திலான போட்டியொன்றில் கலந்து கொண்டார்.

ஜெமெய்க்காவில் நடைபெற்ற 'குரோன்ஃப்ரீ' போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியே அவர் கலந்து கொண்ட போட்டியாகும்.

இந்தப் போட்டியில் அவர் 9.93 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தை ஓடிமுடித்தார். குறிப்பாக 10 செக்கன்களுள் ஓடி முடித்த பதின்மூன்றாவது தடவை இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போல்ட் 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் தங்கம் வெல்வதைவிட 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கத்தை வெல்வதே தனது எதிர்பார்ப்பாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவர் கருத்துத் தெரிவிக்கையில்,2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள போட்டியில் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் உலக சாதனையை நிகழ்த்தக்கூடிய வாய்ப்பு தனக்கு கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுவரை 400 மீற்றர் போட்டிகளில் ஆடவர் பிரிவில் அமெரிக்காவின் மைக்கல் ஜோன்சன்தான் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளவராவார். 1999 ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டில் நடைபெற்ற உலக மெய்வல்லுனர் போட்டிகளிலேயே 43.18 செக்கன்களில் ஓடிமுடித்து அவர் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# பதவிக்காலம் நீடிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் டிரெவர் பேலிஸ் மற்றும் உதவிப் பயிற்றுனர் போள் பார்போஸ் ஆகியோரின் பதவி ஒப்பந்த காலம் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ள 2011 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிரதான பயிற்றுனரான டிரெவர் பேலிஸ் மற்றும் உதவிப் பயிற்றுனர் பார்பிரேஸ் ஆகிய இரண்டு பேரும் 2007 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அணிக்குரிய பயிற்றுவிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளரான நிஷாந்த ரணதுங்காவின் கருத்தின்படி, இந்த இரண்டு பயிற்றுனர்களும் தமது பணியினைத் திறம்பட திருப்திகரமாக செய்து வருவதனால் அவர்களின் சேவையை தொடர்ந்து பெறுவதற்கு உத்தேசித்துள்ளதன் பேரிலேயே அவர்களின் சேவைக்கால ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# சிறந்த வீராங்கனையாக செரீனா வில்லியம்ஸ்

ஆண்டின் சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இரண்டாவது தடவையாகவே இவ்வாறு சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2002 ஆம் ஆண்டிலும் உலகின் சிறந்த வீராங்கனையாக தெரிவாகியிருந்த இவர் கடந்த வருடம் அமெரிக்காவின் பகிரங்க 'கிராண்ட் ஸ்லாம்' பட்டம் வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே, உலக தரவரிசையிலும் முதலாவது இடத்தையும் இவர் பெற்றார். மேலும், சிறந்த அறிமுக வீராங்கனையாக டென்மார்க் வீராங்கனை கரோலின் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 'யுனிசெப்' அமைப்பின் சார்பாக சமூக சேவைகளில் ஈடுபட்ட சேர்பிய வீராங்கனையான இவானொ வீச்சுக்கு மனித நேயத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலைமையகம்

# ஆசியா-ஐரோப்பா அமைப்பின் ஆரம்பமும் அதன் தொழிற்பாடும்

க.பொ.த (உ/தர) மாணவர்களின் தேவை கருதி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது

'ஆசியா-ஐரோப்பா அமைப்பு' எனப்படும் Asia-Europe Foundation (ASEF), சிங்கப்பூரில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் ஓர் அமைப்பாகும். 1997 ஆம் ஆண்டின்போது நடைபெற்ற 'ஆசியா-ஐரோப்பா' மாநாட்டின்போதே இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.




ஆசியா மற்றும் ஐரோப்பா நாடுகளிலுள்ள மக்களிடையே அறிவு மேம்பாடு, கலாசார மற்றும் தனி நபர்களுக்கிடையே நெருக்கமான புரிந்துணர்வு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதே மேற்படி அமைப்பின் முக்கியமான குறிக்கோளாக உள்ளது.

இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு முதல் பத்து வருடங்களுள் பல்வேறு தொனிப்பொருட்களில் 350 இற்கும் மேற்பட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆசியாவையும் ஐரோப்பாவையும் மையப்படுத்தியே அவை செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியன உட்பட இணையத்தளத்தையும் பிரதானமாகக் கொண்டு அனைத்தையும் உள்ளடக்கியதாகவே அவை அமைந்திருந்தன. இத்திட்ட முன்னெடுப்புக்களில் ஆசியா-ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த 14,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்காற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பலர் பல்வேறு ஊடகங்களின் ஊடாக இந்த அமைப்பின் இலக்குகள் பற்றிய பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்தனர்.

## வரலாறும் பணிகளும்

1996 ஆம் ஆண்டில் தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற ஆசியா-ஐரோப்பா மாநாட்டில் கலந்து கொண்ட 25 நாடுகளின் அரச தலைவர்களும் ஐரோப்பிய கொமிஷனும் மேற்படி அமைப்பை (ஆசியா-ஐரோப்பா அமைப்பு) ஆரம்பிப்பதற்கான அடித்தளத்தை இட்டிருந்தனர். அதன்படியே 1997 ஆம் ஆண்டில் ஆசியா-ஐரோப்பா அமைப்பு செயல் வடிவம் பெற்றது. பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட மக்களிடையே ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கமான நட்புறவுகள் தொடர்பான பிரதிபலன்களை சட்ட இயற்றுனர்களுக்கு முன்வைத்து, பொதுஜன அமைப்புக்கள் மற்றும் நாடுகளிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதும் இந்த அமைப்பின் முக்கிய கடமையாக அமைந்துள்ளது.

உலகில் இவ்வாறான அமைப்புக்கள் பல இருக்கின்றபோதிலும் குறித்த ஆசியா-ஐரோப்பா அமைப்பானது, அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளுடன் மட்டுமன்றி, அந்நாடுகளின் உள்ளூர் சிவில் அமைப்புக்களுடனும் தொடர்புகளைப் பேணி வருவதே அதன் தனித்தன்மையாக அமைந்துள்ளது. இதன் போது, உள்ளூர் சிவில் அமைப்புக்களினூடாக கிடைக்கப் பெறுகின்ற தகவல்களை ஆசியா-ஐரோப்பா சம்மேளனத்திற்கு வழங்குவது மட்டுமன்றி அந்த சம்மேளனத்தைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களை தெளிவுறுத்தும் பணிகளும் ஆசியா-ஐரோப்பா அமைப்பினூடாக நடைபெறுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக சாதாரண மக்களிலிருந்து நாடுகள் வரை நல்லதோர் அந்நியோன்யம், புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, அது நல்ல பலனையும் ஈட்டித் தந்துள்ளது.

ASIA-EUROPE FOUNDATION

## அமைப்பு முறை

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கூடுகின்ற ஆசியா-ஐரோப்பா மாநாட்டில் அதன் அங்கத்துவ நாடுகளான 45 நாடுகளின் சார்பாக நிர்வாகக்குழுவொன்று கூடுவதுடன்,அதன்படி 'ஆசியா-ஐரோப்பா அமைப்பு' அதன் தகவல்களையும் விபரங்களையும் மேற்படி நிர்வாகக் குழுவிடம் முன்வைக்கும். இந்த அமைப்பின் தலைமையகம் சிங்கப்பூரில் அமைந்துள்ளதுடன்,




நிறைவேற்று காரியாலயம், நிர்வாகத் திணைக்களம் ஆகியன உட்பட நான்கு பிரிவுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரல் திணைக்களத்தையும் அது கொண்டுள்ளது.

## நிதி

ஆசியா-ஐரோப்பா அமைப்பிற்குத் தேவைப்படுகின்ற நிதியினை இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்ற நாடுகள் சுயவிருப்பின்பேரில் தாமாகவே முன்வந்து கொடுக்கின்றன.



மேலும்,மேற்படி அமைப்பு வேலைத்திட்ட நடவடிக்கைகளை ஆசியா-ஐரோப்பா நாடுகளின் உள்ளூர் சிவில் அமைப்புகளுடன் இணைந்து மேற்கொண்டு வருவதனால் எதுவித தடங்கல்களுமின்றி அவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# கைக்குழந்தைகளுக்கு மிகச்சிறந்த பால்

கைக்குழந்தைகளுக்கு மிகச் சிறந்த, சத்தான பால் எது எனக் கேட்டால் அது தாய்ப்பால்தான். ஆனால், அதிலுள்ள சத்துக்களின் அளவுகள், அதன் நோய்த்தடுப்புக் காரணிகள் பற்றி அதிகமானோர் அறியாமல் இருக்கின்றனர். எனவே, 100 மில்லிலீற்றர் தாய்ப்பாலில் உள்ள சத்துக்களை நோக்குவோம்.

| | |
|---|---|
| காபோவைதரேற்று | - 9.5% |
| பொஸ்பரஸ் | - 14% |
| விற்றமின் A | - 7% |
| சோடியம் | - 7% |
| புரதம் | - 1.1% |
| கொழுப்பு | - 4% |
| கல்சியம் | - 33% |
| இரும்பு | - 1.1% |



என்ற சதவீதத்தில் சத்துக்கள் அடங்கியுள்ளன. வேறு எந்தப் பாலிலும் இவ்வளவு சத்துக்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.இவை தவிர,'இம்மியுனோக்ளோபியுலின்' என்ற நோய்த்தடுப்பு காரணி, 'லைசோசிம்' என்ற கிருமி கரைப்புப் பொருள், கிருமிகளை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய செல்கள் முதலியன தாய்ப்பாலில் உள்ளன.

தாய்ப்பாலில் 'B -லெக்டோக்ளோபியுலின்' என்ற சத்து இல்லை. எனவே, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு ஒவ்வாமை ஏற்படுவதில்லை. அத்துடன், இரவில்தான் தாய்ப்பால் நன்கு சுரக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 200 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-211) |
|---|---|---|---|---|
| க.லக்ஷிகா, தரம் - 5, மகபேரியதென்ன த.ம.வித்., ரஜவெல. | எஸ்.கார்தீபன், தரம் - 4C, வெஸ்லி கல்., கொழும்பு-09. | மொ.ஸல்மி, தரம் - 7B, மின்ஹாத் தே.பாட., மாத்தறை. | ஒ.நிதுசன், தரம் - 8C, இந்துக் கல்., யாழ்ப்பாணம். | ஏ.எல்.எம்.முஸ்தகீம், தரம் - 8K, அல்-ஜிப்ரியா வித்., மட்டக்களப்பு. |




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.04.15 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 203**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## படங்களின் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்தை முறையே கொண்டு சொல் அமைப்போம் (2)




1) ............
2) ............
3) ............
4) ............

## குழப்பியுள்ள வசனங்களை ஒழுங்கமைக்க (4)

01. "என்ன அக்கிரமம்! எனக்கும் மரியாதை இல்லை; நான் அனுப்பிய இந்தப் புத்தகத்துக்கும் மரியாதை இல்லை; இது மிகவும் மோசமான பழக்கமல்லவா; இதை இப்படியே விடக்கூடாது" என்று எண்ணிய பேர்னாட் ஷா,
02. ஒரு சமயம் ஜோர்ஜ் பேர்னாட் ஷா பழைய புத்தகக் கடைக்குச் சென்று புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.
03. அது அவர் எழுதிய புத்தகம்.
04. முன்பு 'அன்பளிப்பு' என்று எழுதியிருந்ததற்குக் கீழே "மறுபடியும் என்னுடைய அன்பளிப்பு" என்று எழுதி, அந்த நண்பருக்கே அனுப்பி வைத்தார்.
05. அப்போது ஒரு புத்தகத்தைப் பார்த்து சற்றே திடுக்கிட்டார்.
06. அன்றே தனது வீட்டில் புத்தகங்களைப் பாதுகாப்பது என்ற முடிவிற்கு வந்தார்.
07. அந்தப் புத்தகத்தை விலைக்கு வாங்கினார்.
08. அதை ஒரு நண்பருக்கு தனது கையெழுத்திட்டு அன்பளிப்பாக அனுப்பியிருந்தார்.
09. புத்தகத்தைப் பெற்ற நண்பர் வெட்கப்பட்டார்.
10. அந்தப் புத்தகத்தை அந்த நண்பர் பழைய புத்தகக்கடையில் போட்டுவிட்டார்.

## கணக்குப் புதிர் (3)



ஒரு சேர்க்கஸ் கம்பெனியில் வித்தைகள் காட்டுவதற்கு குதிரைகளும் ஒட்டகங்களும் தேவைப்பட்டன. மொத்தம் 25,000 ரூபா செலவில் குதிரைகளும் ஒட்டகங்களும் வாங்கப்பட்டன. ஒரு குதிரையின் விலை 1,000 ரூபா. ஓர் ஒட்டகத்தின் விலை 1,250 ரூபா. வாங்கப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கை ஒட்டகங்களின் எண்ணிக்கையை விட இரண்டு குறைவாக இருந்தது. ஆகவே,


* வாங்கப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கை எத்தனை?

............................................

* வாங்கப்பட்ட ஒட்டகங்களின் எண்ணிக்கை எத்தனை?

............................................

## வழி காட்டுங்கள் (1)



## அறிவுக்கு விருந்து - 200 விடைகள்

**போட்டி: 03**

01. அல்ஜீரியா
02. ஐவரி கோஸ்ட்
03. ருவண்டா
04. ஓமான்

**போட்டி: 04**

* தற்போது B யின் வயது - 20
* தற்போது A யின் வயது - 90

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 214 (5)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | |
| | ■ | 5 | | | ■ |
| 6 | 7 | | ■ | ல் | ■ |
| ■ | | ■ | 8 | ■ | 9 |
| 10 | | | | ■ | |
| ■ | | ■ | 11 | | |

### மேலிருந்து கீழ்

01. விரைவில் தீப்பற்றக் கூடியது.
02. போர்-ஒத்த கருத்துச்சொல்.
03. 'சூடு கண்ட ............ அடுப்பங்கரையை நாடாது' என்பது பழமொழி.
04. வாத்தியக் கருவி ஒன்று.
07. இலங்கையில் 9 நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டது.
08. வெப்பம், மின்சாரம் என்பவற்றை எளிதில் கடத்தக்கூடிய உலோக வகையொன்று.
09. ஆந்தை-அலறும் என்பது போல ............ கூவும்.

### இடமிருந்து வலம்

01. நீர், நிலம், வளி, ஆகாயம், தீ என்பனவற்றைக் குறிக்கும் தொகைப் பெயர்.
05. கணவன்-எதிர்ப்பாற்சொல்.
06. 'ஏறக்குறைய' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
10. மற்றவரை மதிக்காத தன்மையைக் குறிக்கும் சொல்.
11. நீர்-ஒத்த கருத்துச்சொல்.

### குறுக்கெழுத்துப்போட்டி 211 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. மேற்கு
02. கோதுமை
03. குர்ஆன்
05. டினார்
07. சிறுத்தை
08. கயிறு
09. நீதி

**இடமிருந்து வலம்**

01. மேற்கோள் குறி
04. குடிமை
06. ஆசி
08. கன்று
09. நீர்
10. சிறுகதை

குறுக்கெழுத்துப் போட்டி -214
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

பி.ரமாபிரியா,தரம் - 11,
கணபதி த.ம.வித்.,
நோட்டன்.

எம்.பாரிக்,தரம் - 8,
அல்-அதான் ம.வித்.,
பதுளை.

கே.நிஷாந்தன், தரம் - 9,
கோணாகலை த.ம.வித்.,
பசறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒல்லாந்தரின் திறமை

மன்னன் இராஜசிங்கனுக்கோ ஒல்லாந்தரின் தந்திரோபாயங்கள் தெரியவந்தது. விரைவில் கொழும்பு செல்ல ஆயத்தப்படுத்தினான். அவர்களுக்கு உதவுவதற்கு திசாவை ஒருவனை அனுப்பினான். மட்டக்களப்பு, நீர்கொழும்பு, காலி ஆகிய இடங்களைப் போல் கொழும்பையும் கைப்பற்றி ஒல்லாந்தர் தமது உரிமையாக்கிக் கொள்வர் எனப் பயந்தான். அவருக்கு கொழும்பில் தங்கவும் ஆசையொன்றிருந்தது.

கோட்டையைக் கைப்பற்றிய பின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என ஒல்லாந்தருக்கு கூறினான். அவர்களும் அதற்கு சம்மதித்தனர். எனினும், அதுவரை காலமும் அரசன் ஒல்லாந்தருக்குக் கொடுக்க வேண்டியிருந்த கடன் தொகையை செலுத்தவில்லை.

இதனிடையே ஒல்லாந்தர் 'புனித ஜோன்' கட்டமைப்பில் பாதியை உடைத்தெறிந்தனர். கி.பி 1655 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி தரைவழியாகவும் கடல் மார்க்கமாகவும் கோட்டையை சுற்றி வளைத்தனர். நான்கு கப்பல்களை உள்ளே விட்டு 'புனித குரூஸ்' நிலையத்தின் மீது தாக்குதலை நடத்தினர். துறைமுகப் பகுதிகளில் இருந்த நிலைகளின் மீதும் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். மூன்று குழுக்களாகப் பிரிந்து ஏணிகள், ஆயுதங்களுடன் படையினர் நகருக்குள் நுழைந்தனர். அதில் ஒரு குழுவினர் 'புனித பிரான்சிஸ் சேவியர்' மதில் சுவர் பக்கம் சென்றனர். மற்றொரு குழுவினர் 'குயின்ஸ் கேட்' எனும் வாயிலை தகர்க்க ஆரம்பித்தனர். மூன்றாவது குழுவினர் வாவியின் பக்கமாக நகர்ந்து நகரத்திற்குள் பிரவேசிக்க முயற்சித்தனர். அவர்கள் கப்பல்களை செயலிழக்கச் செய்யவும் மூழ்கடிக்கவும் முனைந்தனர் எனினும், சகல முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன. போர்த்துக்கேயர் முந்திக் கொண்டனர். அவர்கள் வாவியின் பக்கம் முன்னேறிய குழுவைக் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்



# உலகிலேயே விலை குறைந்த கார் சந்தையில் அறிமுகமாகிவிட்டது

உலகிலேயே மிகவும் விலை குறைந்த கார் என்று கருதப்படுகின்ற கார்தான் 'டாடா நெனோ' என்ற காராகும். இந்தியாவின் பிரபல மோட்டார் வாகன நிறுவனமான 'டாடா' நிறுவனத்தினால் மத்தியதரவர்க்க மக்களுக்கென அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள சிக்கனமான புதிய வடிவிலான வாகனமே இந்த 'டாடா நெனோ' வாகனமாகும்.

இந்த வாகனத்தின் சம்பிரதாய பூர்வ அறிமுகவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த 'டாடா நெனோ' வாகனத்தின் விலை இந்திய ரூபாயில் 100,000 ஆகும். (2,000 அமெரிக்கா டொலர்கள்) இந்தக் காரை அறிமுகம் செய்துள்ள 'டாடா' நிறுவனத்தின் தலைவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் 'நெனோ' காரின் அறிமுகமானது முழு இந்திய வாழ்மக்களினதும் வாழ்க்கைத் தராதரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார். இதுபற்றி மேலும் அவர் தெரிவிக்கையில், 'டாடா நெனோ' வாகனத்தை நாம் உற்பத்தி செய்யத்தொடங்கிய போது அதுகுறித்து கூடிய அளவில் அதனை பிரபல்யப்படுத்தினோம். ரூ.100,000 இற்கு வாகனமொன்றைத் தயாரிக்க முடியாது என்று ஏராளமானோர் தெரிவித்திருந்தனர்.

ஆனால், இன்று இந்த வாகனத்தைப் பார்த்த பின்னர்



'டாடா நெனோ' நிறுவனத்தின் தலைவர் ராடன் டாடா அவர்கள் சிக்கனமான நெனோ காருடன்

அனைவரும் மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தியாவின் மும்பாய் நகர சந்தையில் 'டாடா நெனோ' காரை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்ட கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார். 'டாடா நெனோ' காரானது 'மக்களின் வாகனம்' என்று இந்தியாவின் 'ஓட்டோ கார்' என்ற சஞ்சிகை புகழாரம் சூடியுள்ளது. இந்தக் காரை தமக்கு விரும்பிய விதத்தில் தேவையான உதிரிப்பாகங்களுடன் வாங்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே விலைகுறைந்த வாகனம்







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 08, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org